2 அணா

மு.கருணாநிதி

முரசு 1 | சென்னை 4—2—55 | வெள்ளி | ஒலி 45



# தேன் நிலவே, திரும்பிப் போ!

—:(★):—

பருவுடம்பை வானத்தில் நிறுத்தி, தடாகத்தில் மேயும் நிழலுடம்பால் ஆலிங்கனம் செய்யத் துடிக்கும் முத்துச் சுடர் நிலவுக்கு; முகம் மறைத்து, முதுகு காட்டும் அல்லி—

கட்டழகே என்று, கதிர்க்கரம் நீட்டி, தொட்டணைக்க முயலும் கதிரோனை; 'தொடாதே' என்று உத்தரவு போடும் தாமரை—

இவைகள் இருக்க முடியாததல்லவா? ஆனால் இந்தத் தோகையிலே இப்படி ஒரு புதுமையான அல்லி—விசித்திரமான தாமரை வருகிறது. ஆமாம்; இன்பமே என்று தாவிடும் அன்பனுக்கு தடை விதிக்கிறாள், தையலொருத்தி!

ஏனிப்படி?—நேற்று அவன் நினைவு கள்ளைப்போல இனித்தது; இன்று மட்டும் அவனது வரவு முள்ளைப்போல குத்துவானேன்?

ஒரு சமயம், பரத்தையர் உறவால் அவன் நடத்தை கெட்டவனாகி விட்டானா?

அல்லது, நாளை வருகிறேன் என்று சொல்லி நாளை மறுநாள் வந்தானா? அப்படியிருந்தாலும் 'வரவேற்பு'க்குப் பிறகல்லவா இந்த 'வம்பு' நடைபெற்றிருக்க வேண்டும்! நிலா பெய்யும் அந்த நேரத்தில் அவனைப் 'போ'-என்று சொல்லிடக் காரணம்?

இதோ; மதுரை ஈழத்துப் பூதன் தேவன் நிலைமையை விளக்குகிறார், பாருங்கள்.

தலைவனைப் பிரிந்த காரணத்தால் தலைவியோ மெலிந்து போனாள். பழுவெலும்புகளையெல்லாம் விரல் விட்டு எண்ணி விடலாம் போலிருக்கிறது. உள்ளம் கவர்ந்தவனை அணைத்து மகிழ்ந்த தோள்கள் நெகிழ்ந்து விட்டன. நறும்புகை படாத காரணத்தால் கூந்தல் குழைய—கைவளை கழல—மேனியெங்கும் பசலை படர, அவளோ இலை உதிர்த்த ஏருவாகி விட்டாள்.

மகளுடைய நெஞ்சிலே மலைத்தோளன் ஒருவன் குடியேறி விட்ட கதை அன்னைக்குத் தெரியாது. அவள், தெய்வக் குற்றம் தான் அந்தத் தேன்மொழியை உருக்குகிறது என்று எண்ணங்கொண்டு, பூசாரியை அழைத்து, வேலனுக்குப் பூசை போட ஏற்பாடுகள் அனைத்தையும் செய்து விட்டாள்.

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்



Best copy available

# காமராசர் இப்படி எழுதவேண்டும்!

[ கற்பனை ]

ஜெய் ஹிந்த்!

மதிப்பிற்குரிய பண்டிட்ஜி அவர்களுக்கு, நமஸ்காரம். ராஜ்யமுதல் மந்திரிகளுக்கு நீங்கள் அனுப்பிய கடிதங்களில் எனக்கும் ஒன்று நேற்று வந்து சேர்ந்தது. மாஜி மன்னர்கள், ஜமீன்தார்கள், இவர்களின் பெரிய கட்டிடங்களை பொது ஸ்தாபனங்களுக்கு சர்க்கார் வசப்படுத்திக் கொள்ளலாம் என கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இந்தப் புரட்சிக் கருத்துக்குத் தலை வணங்குகிறேன்.

வெள்ளைக்காரன் என்ன தான் வெளிநாட்டுக்காரனாக இருந்தாலும் இந்தக் கடிதத்தை படிக்கும் போது, இடையிலே நிறுத்தி விட்டு, மனதார அவனுக்கு நன்றி செலுத்திவிட வேண்டும் போல் தோன்றுகிறது. வானை முட்டும் பிரம்மாண்டமான கட்டிடங்களை அவன் கட்டிவித்துப் போயிராவிட்டால் நாம் எவ்வளவுபணம் செலவு செய்து அவைகளைக் கட்டியிருக்க வேண்டும்! சென்னையைப் பொறுத்த வரையில் கடற்கரைக்கோட்டை, ரிப்பன் பில்டிங், ரயில்வே அலுவலகம், மவுண்ட்ரோடு சர்க்கார் மாளிகை இவைகளுக்கு மட்டுமே இந்திய சர்க்காரின் பணம் எவ்வளவு விரயமாகியிருக்கும்! எத்தனை எத்தனை பிரத்தியேக வரிகளைப் போட்டு பொது மக்களை 'காமதேனு'க்களாக்கியிருந்தாலும் அவ்வளவு பொருளைக் கறந்துவிட்டிருக்க முடியுமென்பதை என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதுதான். நிற்க,

தங்களின் கடிதப்படி தென்னாட்டில் அப்படி யொன்றும் அதிகமான அளவு மாஜி மன்னர்களின் கட்டிடங்கள் இல்லை-ஜமீன் மாளிகைகளும் மிகக் குறைவு. இராமநாதபுரம் ஜமீன், சிவகங்கை ஜமீன், புதுக்கோட்டை சமஸ்தானம் முதலியவற்றைச் சேர்ந்த கோட்டை கொத்தளம் ஏற்கனவே-அதாவது ஐந்தாண்டுகளுக்கு முன்னதாகவே பொது நிலையங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு விட்டன. அந்த அளவு தென்னாடு முன் கூட்டியே விழித்துக் கொண்டது. இந்த எழுச்சியை நீங்கள் கண்டிப்பாக ஒத்துக் கொண்டுதானாக வேண்டும். காரணம், இப்படிப்பட்ட காரியங்களை செய்ய சர்க்காரைத் துண்டும் பெரியதொரு அறிவியக்கம் தென்னாட்டில் இயங்கி வருகிறது. அந்த இயக்கத்தைப் பற்றி தங்களுக்கு நான் அதிகமாகச் சொல்ல வேண்டியதில்லை. நீங்களே பலமுறை அந்த சக்தியை எடை போட்டும் பார்த்ததுண்டு. காங்கிரசின் இலட்சியத்திற்கு நேர் விரோதமான ஒரே ஒரு கொள்கையை, அதாவது நாட்டைப் பிரிக்க வேண்டுமென்ற கொள்கையை அவர்கள் விடாப்பிடியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார்களேயன்றி, அவர்கள் கூறும் மற்ற கருத்துக்களை வீம்புக்காக நாம் மறுத்தால் தான்! அத்தனைக்கும்ஆதாரம்காட்டுகிறார்கள், புள்ளி விபரங்களை நீட்டுகிறார்கள். ஏன் இதையெல்லாம் கூறுகிறேன் என்றால், அந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், நெடு நாட்களாகவே உபயோகமற்ற கோயில்களை, மருத்துவவிடுதிகள், பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், படிப்பகங்கள் கூட்டுறவுப் பண்டக சாலைகள், பஞ்சாயத்துகள், போன்ற பொது நிலையங்களுக்கு சர்க்கார் பயன் படுத்திக் கொள்ள வேண்டும்; அங்குள்ள சிற்ப சித்திர வேலைப்பாடுடைய பொருள்களைக் கண்காட்சியில்வைத்துவிட வேண்டும் என சொல்லியும் எழுதியும் வருகிறார்கள். தென்னாட்டில் மட்டும் ஏறத்தாழ 30,000 தர்ம ஸ்தாபனங்கள், அதாவது கோயில்கள், மடங்கள் இருப்பதாக இரண்டாண்டுகளுக்கு முன் கேள்விப்பட்டிருக்கிறேன். அவைகளில் பெரும் பகுதி சோம்பேறி மடங்களாகத் தானிருக்கின்றன, மனித வர்க்கமே தலைகாட்டியிராத இருட்டறைகள் மதுரை மீனாட்சி கோயிலில் எத்தனை தெரியுமா? எண்ணெய் தோய்ந்த வழுக்குப் படிகளும், வௌவால் அடையும் நாற்றக் கிடங்குகளும் தென்னாட்டு ஆலயங்களில் ஏராளமாயிற்றே! அவைகளை எல்லாம் செப்பனிட்டால் சென்னை சர்க்காருக்கு புதிய கட்டிடங்களே தேவைப்படவேமாட்டாதே! இப்படிப்பட்ட சீர்திருத்தங்களுக்கு நிச்சயமாக தென்னாட்டில் முழுக்க, முழுக்க ஆதரவு கிடைக்கும் — கோயிலையும் சமுதாயச் சடங்குகளையும் முன் வைத்து பயனடையும் ஒரு சிலரின் எதிர்ப்பு சர்க்காரை ஒன்றும் பாதித்துவிடாது. ஆனால் தென்னாட்டுக் கோயில் சொத்துக்களை டில்லி எடுத்துக் கொள்வதை மட்டும் தென்னாட்டில் எந்தக் கட்சியும் ஆதரிக்கவில்லை. அண்மையில் மதுரைக் கோயிலை டில்லி எடுத்துக் கொள்ளப் போவதாக ஒரு 'ஹேஷ்யம்' வந்ததற்கு எவ்வளவு அதிருப்தி பரவி விட்டது தெரியுமா?

காங்கிரஸ் ஆட்சிக்குட்பட்ட ஒன்பது மாநிலங்களில் ஒன்பது விதமான உரிமைக்குரல்கள் ஒலிக்கத் தொடங்கினாலும் தென்னாட்டின் உரிமைக்குரல்தான் பெருகிக் கொண்டு வருகிறது. அந்த இயக்கத்தாரை நாம் அனுசரித்துப் போகாவிட்டால் நமக்குத் தொல்லைதான். அதற்காகத்தான் சொல்கிறேன் கோயில்களைப் பொறுத்த மட்டிலாவது அவர்கள் சொல்லும் சீர்திருத்தத்தை நடைமுறைக்கு கொண்டு வர எண்ணுகிறேன்,

அதற்கு நீங்கள் அனுமதிதர வேண்டும். கேட்பாரற்று தூங்கும் கோயில்களை பயனுள்ள அலுவலகங்களாக்க வேண்டும், புதிய கோயில்களைப் கட்டுவதற்கு சர்க்கார் அனுமதிதரக் கூடாது, வசதி மிக்கவர்கள் ஆலயம் கட்டித்தான் ஆகவேண்டுமென்றால் சர்க்காருக்கு ஒரு பெரும் தொகையை கட்டணத் தொகையாகக் கட்ட வேண்டும், இது எனது நெடுநாளைய ஆசை. இதற்கு நீங்கள் ஆதரவு தருவீர்களென்று எண்ணித்தான்இந்தப்பதில்முடங்கலைத் தீட்டுகிறேன். இந்தக் கடிதத்தை எழுதும்படியான சூழ்நிலையை உருவாக்கியது தங்களின் கடிதம் தான்—நன்றி! வந்தே மாதரம்!

அன்புள்ள
**கே. காமராஜ்**
சென்னை முதல் மந்திரி
29-1-55

★

## ★ காமராஜ் கணவாய்! ★

"விலகப் போகிறார்; வெளிநாடு சென்றிருக்கும் பண்டித ஜவகர்லால் நேரு வந்ததும் டி. டி. கிருஷ்ணமாச்சாரி தனது விலகல் கடிதத்தை சமர்ப்பிக்கப் போகிறார்" என்றெல்லாம் பத்திரிகைகள் பெருத்த அளவில் தடித்த எழுத்துக்களில் பிரசுரித்திருக்கின்றன.

இதுவரை மத்திய அரசிலுள்ள எத்தனை மந்திரிகளின் 'வெட்டி வீராப்பு'கள் நேருவின் முகஸ்துதியால் சரணாகதி அடைந்திருக்கின்றன என்பதை நாமறிவோம். டி. டி. கே.யின் ஆறு மாதத்திற்கு முந்திய ஆர்ப்பரிப்பும், தேஷ்முக்கின் பிகுவுமே இதற்குப் போதுமான சான்றுகளாகும். ஆனாலும் கிருஷ்ணமாச்சாரியாரின் இன்றைய மனக்கசப்பு, 'புலிவருகிறது, புலிவருகிறது' என்று அபயக்குரல் எழுப்பி உதவிக்கு வந்தவர்களைக் கண்டு நையாண்டி செய்துவிட்டு, உண்மையாகவே புலிவந்த நேரத்தில் கதறியழுத வேடிக்கைக் கதையாக முடிந்து விடாது என்று தான் நினைக்கிறோம். காரணம், டில்லி வட்டாரத்தில் 'மதராசி'க்குள்ள வெறுப்பும், அந்த வெறுப்பை கிருஷ்ணமாச்சாரியார் பயன்படுத்திக் கொண்டு சென்னை அரசியலில் ஒரு 'புளியங்கொம்பை' பற்றிக் கொள்ள ஒரு வாய்ப்பும் ஏற்பட்டிருப்பதை அரசியல் நுணுக்கம் அறிந்தோர் புரிந்து கொள்வார்கள்.

மத்திய அரசில் பெரும் பதவி வகிப்போரில் பெரும் பகுதியினர் உ. பி. யைச் சேர்ந்தவர்கள்—'சமதர்மம்' பேசும் ஜவகரின் சொந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். இந்த (அ)'நியதி'யை பண்டிதரின் பக்கமிருந்து பணியாற்றுவோரும் மறை முகமாகக் கண்டிக்கத் தவறியதில்லை. இதையொட்டித்தான் டி. டி. கேயின் ராஜினாமா தகராறும் கொழுந்துவிட்டிருப்பதாக அரசியல் வட்டாரத்தில் பேசிக்கொள்ளப் படுகிறது. "நான் 'அவாள்' குழுவினரைச் சேர்ந்தவனானாலும், மதராஸ்காரன் என்பதற்காக இந்த சேட்டுகள் என்னை வெறுக்கிறார்களே" என்று டி. டி. கே. அடிக்கடி மனம் வெதும்பியதுண்டாம். ஆனாலும் டில்லியை உதறித் தள்ளிவிட்டால் வேறு வகையில்லையே—அரசியல் துறவையும் அதற்குள்ளாக மேற்கொண்டுவிடக் கூடாதே என்றும் அவர் மனச்சாந்தி பெற்றிருக்கிறாராம். அதனால்தான் நல்ல தருணம் பார்த்து நேருவின் உ. பி. நல வெறியை முன்வைத்து அங்கிருந்து 'குடிசை'யைக் கிளப்பிக்கொண்டு சென்னை வந்துவிடலாமென்று முடிவு செய்துவிட்டாராம்.

சென்னைக்கு வந்து அடுத்தபடியாக என்ன செய்யப் போகிறார்? போட்டிருந்த மூலதனங்களைக் காட்டிலும் பதின்மடங் வருவாயைத் தந்துவிட்ட அவரது சொந்த தொழில் நிலையங்களைப் பற்றிக் கூட கவலையில்லையாம்—என்றென்றும் அரசியல் நட்சத்திரமாக ஜொலிக்கவேண்டுமாம்! அவ்வாறு டி. டி. கே. தமிழகத்து அரசியலில் புகுவதற்கு 'காமராஜ் கணவாய்' இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் நமது செய்திப் புறா "கக்கன் ஏமாறுவாரா, அல்லது சுப்ரமண்யத்தின் ஒரு 'கனம்' குறையுமா" என்பதை இப்போதே திட்டவட்டமாகக் கூறுவதற்கில்லை என்று சொல்லுகிறது.

## பாகனேரியில்!

★

பாகனேரியைச் சேர்ந்த தோழர் நாகப்பா (பொதுத் தேர்தலில் ஆர். வி. சாமிநாதனை எதிர்த்து நின்றவர்) சிறை சென்று வந்ததை யொட்டி 23-1-55 அன்று மாலை பாகனேயிரில் மாணவ கழகத்தினர் சார்பில் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில் ஓர் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ், எஸ். தென்னரசு, பி, திருஞானம், காந்தி, சுப்ரமணியன், சுந்தரம், சேது, ஆகியோர் பாராட்டுக் கூட்டத்தில் பங்கேற்று பணியாற்றினார்கள். முடிவில் தோழர் நாகப்பா பாராட்டுக்கு நன்றி தெரிவித்தார். அதன்பின், அதே மேடையில் தி. மு. க. பொதுக் கூட்டம் நடைபெற்றது, நாவலர் நெடுஞ்செழியன் தி, மு, க. வின் குறிக்கோள் குறித்து நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்.

# தலையங்கம்

சென்னை　　4—2—55　　வெள்ளி

## வேண்டாம் 'சுதந்தர புராணம்'!

" விடுதலைப் போராட்டத்தில் உயிர்த் தியாகம் செய்த தியாகிகளுக்கு அஞ்சலி தெரிவிக்கும் முறையில் ஜனவரி 30-ந் தேதி காலை 11-மணிக்கு நாடு பூராவிலும் இரண்டு நிமிடம் மௌனம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் "

இப்படி ஒரு உத்தரவை சென்ற கிழமை 12-ந் தேதி மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்காருக்கெல்லாம் அனுப்பியிருந்தது. அதன்படியே 30-ந் தேதியன்று இந்த உபகண்டத்தில் மௌன விரதத்தை அனுஷ்டித்துக் காட்டினர், தேசியத் தோழர்கள். அரசாங்கப் பணிமனைகள், பள்ளிக்கூடங்கள், கலாசாலைகள் — இன்னும் இதர கூட்டங்களில் இருந்தோரெல்லாம் இரண்டு நிமிட நேரம் எழுந்து நின்றனராம். அகில இந்திய ரேடியோ நிலையங்கள் இரண்டு நிமிடங்களுக்கு எதையுமே ஒலிபரப்பவில்லையாம். சரியாக காலை 11-மணிக்கு புறப்படும் ஆகாய விமானங்கள், கப்பல்கள், புகை வண்டிகள் இவையெல்லாம்கூட இரண்டு நிமிடம் தாமதித்தே புறப்பட்டனவாம்.

வழக்கமாக இந்தியச் செய்தித் தாள்களைப் புரட்டிப் பார்க்கும் அயல்நாட்டுக்காரனொருவன் திடீரென்று இந்தச் செய்தியைப் படித்தால் என்ன நினைப்பான் ?

அடிமை விலங்கொடித்து — வெள்ளைக்காரனுடன் உறவறுத்து ஆண்டுகள் ஏழும் உருண்டோடி விட்டன; அப்போதெல்லாம் அனுஷ்டிக்கப்படாத மௌன விரதம் இந்த ஆண்டிலிருந்து மட்டும் அனுஷ்டிக்கப்படுவானேன் ? அப்படியானால்; நாட்டு விடுதலைக்கு உடல், பொருள், ஆவி தந்து—சடலமாக மண்ணிலே சாயினும், 'கடல் சூழ்ந்த பாரதமே! உன்னை உருக்குலைத்த ஏகாதிபத்தியத்தை சுடலையில் ஏற்றாமல் ஓயேன்' — என்று வீர மொழியுரைத்து உரிமைக் கொடிபிடித்தோரை இத்தனைகாலமும் ஆளவந்தார்கள் மறந்திருந்தார்களா ?

அண்டத்திலிருக்கும் பல நாடுகளைப்போல இந்த உபகண்டமும் குடியரசு நாடாகப் பிரகடனப் படுத்தப்பட்டு இன்றோடு ஆண்டுகள் ஐந்து ஆகின்றன. கடந்த நாலு ஆண்டு காலமாக — இந்த நாளில் — இந்த நேரத்தில் உச்சி மேட்டிலிருந்து கர்ஜனை புரிந்தவர்கள், இன்றுமட்டும் ஊமை வேஷம் போடுவானேன் ?

ஜான்சிராணியும், ஜாலியன்வாலா பாக்கிலே துப்பாக்கிக் குண்டுகளை மார்பிலே தாங்கி மண்ணிலே சாய்ந்த தூய்மையாளர்களும், ஆள்வோரின் கனவிலே தோன்றி, தங்களுக்கு நினைவுநாள் கொண்டாடும்படி முறையிட்டார்களா? அல்லது; 'நாட்டின் மூச்சோடு கலந்துவிட்ட எங்களை மறந்துவிட்டால், உங்களுக்கும் உங்களது கட்சிக்கும் குறைவந்து சேர்ந்துவிடும்" — என்று எச்சரிக்கை விடுத்தார்களா? பின்னர் ஏன் இந்தத் திடீர்முடிவு; அவசர அறிக்கை; உடனடியான மௌன விரதம்?

அடிமை நாட்டிலே உரிமை நாத மிசைத்தோர் பின்னர் ஆட்சிபீடம் ஏறும்போது செய்ய வேண்டிய முதற்காரியம்—ஆரம்பப்பணி விடுதலை அணிவகுப்பின் முன்னணியிலே நின்று உயிரை விலையாகத் தந்தோரின் தியாகத்துக்கு அஞ்சலி செய்ய வேண்டியதுதான்! செய்தார்களா, இவர்கள்?

பச்சிளங்குழந்தைகள் 'அப்பா, அப்பா' என்று அழ, புத்திர சோகத்தால் அன்னைமார் புலம்ப, விதவைக் கோலத்தோடு வெம்பிடும் பிஞ்சாய் வாடிடும் மனைவியை மனக்கண்முன் நிறுத்திக் கொண்டு—வந்தேமாதரக் கோஷத்தோடு மயானப் பிரயாணம் நடத்தினானே திருப்பூர் குமரன், அவனைப் பற்றி ஆட்சிபீடம் ஏறியோர் ஒரு நாளாவது வாய் திறந்ததுண்டா?

கும்பினியார்களின் கோட்டை மடக்கிய கட்டபொம்மன்-சட்டம் என்னை என்ன செய்யும்?—என்று சூளுரைத்து, சுதேசக் கப்பல் விட்ட சிதம்பரம் இவர்களுடைய வீரவரலாறுகளெல்லாம் என்றைக்காவது மக்கள் மன்றத்துக்கு அழைத்துவரப்பட்டதுண்டா?

—இதுபோன்ற கேள்விகளை நாமெல்லாம் அடுக்கிக் கொண்டே போவோம் என்பதற்காகத்தான் நாடாள வந்தோர் தப்பி ஓடுவதற்கு புதியதொரு வழியொன்றை கண்டுபிடித்து விட்டார்கள். அப்படி அவர்கள் கண்டெடுத்த பாதைதான் அன்னை பாரத மாதாவின் சன்னிதானத்தில் ஜனவரி 30-ந்தேதி காலை 11-மணிக்கு அனுஷ்டிக்கப்பட்ட மௌன விரதம்!

ஆகஸ்டுக் கலவரத்தின்போது தந்திக் கம்பிகள் அறுத்து, தண்டவாளங்கள் பெயர்த்து பின்னர் அதற்குச் சன்மானமாக ஐந்து ஏக்கர் நிலம் பெற்ற தியாகிகளெல்லாம், இரத்தம் சிந்தி விடுதலைப் பயிர் வளர்த்த வீரக்குமரன்களோடு சேர்க்கப்பட்டு விட்டார்கள்!

தலையை விலையாகத் தந்து தரணிகாத்த கட்டபொம்மன்களோடு தண்டவாளம் பெயர்த்தவர்களும் ஒன்றாக்கப்பட்டு விட்டார்கள்!

செக்கிழுத்து செத்த சிதம்பரம், தபாலாபீசைக் கொளுத்திய 'தியாகி'யோடு சேர்க்கப்பட்டு விட்டார்!

இந்த தியாகிகளின் கலப்படத்திற்குத்தான் மகாத்மாவின் நினைவு தினத்தன்று தேசமெங்கும் அஞ்சலி—இரண்டு நிமிஷ நேரம் மௌன மரியாதை—இவையெல்லாம் 'தேசீயத்தின்' பெயரில் நடந்தேறியிருக்கிறது.

இது குறித்து, 'சுதந்திரப் பெருமை' என்னும் தலைப்பில், 'தினமணி' எழுதியுள்ள தலையங்கத்தைப் பாருங்கள். தியாகிகளின் பட்டியல் தயாரிக்க வேண்டியதன் அவசியம் பற்றிக் கூறும்போது அது இப்படி எழுதுகிறது :

"மற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதற்காகக் காத்திராமல் சுதந்திரப் போரில் பங்கு கொண்ட ஒவ்வொரு ஊரிலும், தேச பக்தியுள்ள ஒரு சிலரேனும் தாமே சொந்தப் பொறுப்பில் உள்ளூர்த் தகவல்களைச் சேகரிக்கலாம், காங்கிரஸ் கமிட்டிகள் இந்த திருப்பணியை ஆங்காங்கு மேற்கொள்ளலாம்."

— செய்யவேண்டிய காரியம்தான்! நாட்டவர் நெஞ்சிலே உற்சாகம் நிலைபெறச் செய்ய தியாகிகளின் தொண்டு நிச்சயம் உதவும். இந்த உபதேசத்தோடு 'தினமணி' தலையங்கம் முடிந்துவிடவில்லை— இதோ, மீண்டும் !

"பல ஊர்களுக்கு ஸ்தல புராணங்கள் இருக்கின்றன. அவையெல்லாம் சரித்திர ரீதியில் உண்மைதானா என்ற ஆராய்ச்சி அவசியமில்லை... அவற்றின் மூலம் உள்ளூரிடம் ஒரு பிரியமும், நற்செயலாற்றுவதில் ஒரு ஆர்வமும், செய் நேர்த்தியில் ஒரு பெருமையும் பிறக்கின்றன. பழமைக்கே இந்த மகத்துவம் உண்டென்றால், வானிலும் சிறந்தது என்று போற்றப் பெறும் பிறந்த பொன்னாட்டின் விடுதலைப் போரில், தம்மூர் பற்றிய பங்கின் வரலாறுகளை சேகரித்து, தொகுத்து, தாமும் மகிழ்ச்சியுற்று, பின்வரும் சந்ததிகளும் போற்றச் செய்வதிலுள்ள பெருமைதான் எத்தனை?"

அதாவது, ஒவ்வொரு ஊருக்கும் பண்டித சிகாமணிகள் புளுகி வைத்த ஸ்தல புராணம் இருப்பதைப் போல், தியாகிகள்—தேச பக்தர்களின் வரலாறும் இருக்கவேண்டுமாம். அவையெல்லாம் உண்மையாக இருக்க வேண்டுமென்று கூட அவசியம் கிடையாதாம்—இதைத்தான் 'தினமணி' ஆசிரியர் ஜாடையாகக் கூறுகிறார்; ஊருக்கொரு 'சுதந்தர புராணம்'—உண்மை கலக்காத பாகவதம் வேண்டுமென்று !

சரித்திரத்தின் பொன்னேடுகள் மீது சாணத்தை வாரி இறைக்கும் இந்தக் கொடுஞ்செயலை என்னவென்று சொல்வது? தினமணி ஆசிரியர்


★ தொடர்ச்சி 9-ம் பக்கம்

## ஆசிரியர் மு. க. உடல்நிலை.

★

எழும்பூர் கண் வைத்திய சாலையிலிருந்து வீடு வந்து சேர்ந்த மு. க. அவர்கள் இன்னும் 'அவுட் பேஷண்டா'க இருந்து சிகிச்சை பெற்று வருகிறார். சில தினங்களில் பூரணமாக குணமாகி விடுமென்றும், அதுவரை நல்ல ஓய்வு வேண்டுமென்றும் டாக்டர் கூறுகிறார்.

இந்த நிலையில் தலையங்கம் போன்ற கட்டுரைகளை அவர் சொல்லி, அதை எழுதிப் பிரசுரிக்க முடிகிறதே தவிர, அவரே உட்கார்ந்து 'புதையல்' தொடர் கதையை தொடர்ந்து எழுத உடல்நிலை இடந்தரவில்லை. எனவே இன்னும் ஓரிரு வாரங்களுக்கு 'புதையல்' இடம் பெறாவிட்டால் வாசக நண்பர்கள் வருந்த மாட்டார்களென்று நினைக்கிறோம். பொறுத்தருள வேண்டுகிறோம்.




ஆதியிலே போர்வீரர், தம் கரத்தில்
    அழிக்கின்ற கூர்வேலை வைத்திருந்தார்.
பாதியிலே, பொய்ப்பேச்சை நம்பி; கோவில்
    பக்கத்தில் வேல்தன்னை நட்டு வைத்தார்.
சாதிமதம் தன்னைவர வேற்று வாழும்
    தமிழ் மூடர், வேலுக்குப் பூசை செய்ய;
சூது செயும் ஆரியரோ அதனைக் கண்டு
    சிரித்திட்டார்; சிரிக்கின்றார்; நம்மை நோக்கி.

* * *

ஆதியிலே கவிஞரெலாம் தமிழில், என்றும்
    அழியாத எண்ணங்கள் சேர்த்து வைத்தார்.
பாதிமுடிப் பார்ப்பனர்கள், விளக்கு ஏற்றிப்
    படிப்பதுபோல், இடைச்செருகல் செய்துவிட்டார்.
காதகரின் கைவிரலை, அந்த நாளில்,
    கற்றவர்கள் துண்டித்து இருத்தல் வேண்டும்!
சாதுவைப் போல் அவரெல்லாம் இருந்த தாலே,
    தண்ணீரை, ஜலமாகத் திருப்பி விட்டார்.

* * *

ஆதியிலே நம்பெரியோர், வெண் ணிலாவை;
    அதுவும் ஓர் உலகம் எனத் தீர்மா னித்தார்.
பாதியிலே வந்தவர்கள், நிலவு தன்னைப்
    பகவானாய் ஆக்கிவிட்டார். அதனால் இங்கே,
சோதிட நூல் தோன்றிற்று. அந்த நூலின்
    சொற்களிலே ஏமாந்தார் நமது மாந்தர்.
தூது செலும் வர்க்கம், தன் பிழைப்புக் காகச்
    செய்திட்ட சூழ்ச்சிதனில், வெற்றி பெற்றார்.

* * *

ஆதியிலே, வாள்வேந்தர் முத்தை; முத்தம்
    அளிக்கின்ற மனைவிக்கு, அளித்து வந்தார்.
பாதியிலே, அம்முத்தை, ராணிப் பெண்கள்;
    பாவலர்க்குப் பரிசாக ஈந்து வந்தார்.
வேதியர்கள் கைநீட்ட, அந்த முத்தை,
    விருப்பமுடன் தமிழ்ப்புலவர் அவர்க்குத் தந்தார்.
மீதியுள தமிழரெலாம், பார்ப்பான் சொன்ன,
    மோட்சத்தைப் பெறுதற்குப் பொருள் தொலைத்தார்.

* * *

ஆதியிலே, வியாபாரக் கப்பல் ஓட்டி
    அருஞ்செல்வம் சேர்த்திட்டார், பட்டி னத்தார்.
பாதியிலே, பலதெய்வந் தனைக்கண் டித்துப்
    பழத்தமிழில். விரிவாக விளக்கம் தந்தார்.
வேதியர்கள் தூண்டிவிட; அவரை, மக்கள்;
    மண்குழியில் உயிரோடு மூடி விட்டார்!
சேதியறி யாதிருக்க, சூழ்ச்சி செய்தோர்,
    சமாதியடைந் தார் என்று, கட்டி விட்டார்.

* * *

ஆதியிலே தன்னருகில் அமர்ந்து பேச
    அன்புள்ள மனையாட்டி, கூசச் பட்டாள்.
பாதியிலே, ஓர்பாயில், இருவர் ஆனார்.
    பிறகு அவள் கருவுற்றாள். நகர்ந்து கொண்டான்;
சூதறியா தேசிங்கு ராஜன்--என்று,
    சொல்வதற்கு வழியில்லா வகையில்; அன்னோன்
காதல் செயும் பருவத்தைக் குடுமிப் பார்ப்பான்,
    கெடுத்திட்டான், தோஷமெனும், பொய்யைக் கூறி!

★ ★ ★

# சீனாவின் அந்தமானில்!

துரு வேறிக் கிடந்த 'டாங்கி'களுக்கு வல்லரசுகள் எண்ணெய் போடுகின்றனவாம்! ஓய்வு பெற்றிருந்த சிப்பாய்களுக்கு மறந்துபோன பாடங்கள் நினைவுறுத்தப் பட்டு வருகின்றதாம்! சீனாவின் அந்தமானும் பார்மோசாவால் விழுந்த இந்த முடுச்சை கல்லறை மைதானத்திலே—கழுகுகள் வட்டமிடும் போர்க் களத்திலே அவிழ்க்காமல் உச்சி மாடங்களில் ஒலிபெருக்கிகளின் முன் நின்று வாதித்து அவிழ்ந்து விட வேண்டுமென்பதுதான் வெண்புறா சிறகடிக்க வேண்டுவோரின் தணியாத ஆசை! அந்த ஆசை விளக்கை அமெரிக்க ஏகாதிபத்தியம் அணைத்து விடுமோ என்ற பீதியை செய்தித்தாள்கள் தினம் தினம் தந்து கொண்டிருக்கின்றன. அழிவு சக்தியின் கோரப்பிடியில் இந்த அகிலம் சிக்கி சீரழிக்கப்பட்டு விடுமோ என்ற கவலை தொண்டையைக் கவ்வுகிறது.

பார்மோசா என்னைச் சேர்ந்தது என்கிறது பொதுவுடமைச் சீனா. ஆனால், அங்கே பதுங்கி வாழும் சியாங்கேஷேக் பார்மோசா எனதுதான் என்கிறார். செல்வம் தன் மடியிலே குவிந்து கிடக்கிறது என்ற மமதையால் நீதியை மறந்த அமெரிக்கா—புரட்சி வரலாறுகளைப் படித்துப் படித்து தனக்கென ஒரு புதுவாழ்வை தொடங்கிக் கொண்ட அந்த பணக்கார சீமையினர் துரத்தியடிக்கப் பட்ட சியாங்கே ஷேக்கிற்கு துணை நிற்கப் போகிறார்களாம். தனது படையை பசிப்பிக்கில் ஆயுதபாணியாக நிறுத்தி வைத்திருக்கிறதாம். அமெரிக்கப் படையை தன் விருப்பம் போல ஏவிவிட ஐசனோவர் அமெரிக்க சட்ட சபையில் விசேட அதிகாரம் பெற்றிருக்கிறாராம்! சீனப் பிரதமர் சூ. என், லாயோ, பர்மோசாவை எப்படியும் மீட்டி விடுவோம் என்று சூளுரைத்திருக்கிறார். அமெரிக்காவுக்கு இதில் தலையிட அதிகாரமில்லையென்றும் சூதிட்ட வட்டமாகத் தெரிவித்து விட்டார். படை குவிந்து கொண்டிருக்கிறது. பாசறைகள் அமைந்து கொண்டு வருகின்றன, டாலர் சீமான்களுக்கு ஏவல் புரியும் இந்த நாட்டு 'ஒடை முதலை'கள் எழுப்பியிருக்கும் புதுக்குழப்பத்தையும் நாம் மறந்து விடவில்லை. பார்மோசா ஆரம்பத்தில் போர்ச்சுக் கீசியர்களிடம் இருந்ததென்றும், அதை அவர்களிடமிருந்து டச்சுக்காரர்கள் கைப்பற்றியதாகவும் 1683ல் ஏற் பட்ட போரில் சீனா டச்சுக்காரர்களிடமிருந்து எடுத்துச் கொண்டதாகவும் சொல்லுகிறார்கள். உண்மைதான், பர்மோசா கைமாறிக் கொண்டு வந்ததற்காக சீனாவுக்கு உரிமைப் பட்டதல்ல தென்று சொல்லி விடுவதற்கில்லை. 1895 ஆண்டுவரை, அதாவது இருநூறு ஆண்டுகள் சீனாவின் கையிலே இருந்திருக்கிறது பார்மோசா, அதன் பிறகு ஜப்பான் பார்மோசாவை வசப்படுத்திக் கொண்டது, ஜப்பானியர்களிடம் பர்மோசா நீண்டநாள் இருந்து விடவில்லை. 1943ல் நடைபெற்ற கெய்ரோ வல்லரசுக் கூட்டத்தில்பார்மோசா மீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கப் பட்டது. அந்த வல்லரசுக் கூட்டத்தில் முக்கிய அங்கம் வகித்த அதே அமெரிக்காதான் இன்று கச்சை கட்டி நிற்கிறது, சீனாவுக்கு எதிராக! மனிதாபிமானம் வளர்த்த மனிதகுல மாமேதையாம் ஆப்ரகாம் லிங்கனின் நாட்டில், தேய்ந்த படிக்கல்லை அரசியல் தராசில் போடுகிறார்களே என்பதை நினைக்கும் போது உள்ளம் வேகத்தான்செய்கிறது! தனது வெறியாட்டத்திற்கு மேடை தேடி அலையும் அந்த ஆதிக்கக்காரர்கள் சரித்திரத்தை விரிக்கிறார்கள். அவர்கள் காட்டுகிற சரித்திரப்படி பார்மோசா போர்ச்சுகீசியர் வசமிருந்து கைமாறியது என்றாலும், அந்த ஆரம்பகால பார்மோசாவின் போஷகர்கள் இப்போது உதறித் தள்ளிவிட்ட பிறகு அந்த பார்மோசா யாருக்குச் சொந்தம்?

இருநூறு ஆண்டு காலமாக இன்னமுதூட்டி இன்பத்தாலாட்டி, இரண்டு முறை அதை இழந்து மீண்டும் உரிமைக்குப் போராடி வல்லரசுகளின் முன்பாகவே பெற்றுக் காத்து வந்த சீனாவுக்குத் தானே பார்மோசா உரிமைப்பட்டது? என்னுடையதே சீனா என்று போர்ச்சுக்கீசியர் போர்க்கோலம் பூணவில்லை; விட்டேனா பார் என்று டச்சுக்காரர்கள் வீரமொழி பகர்ந்திடவில்லை; சியாங் மட்டும் எப்படிக் கொக்கரிக்க முடியும்? அதற்கு பரிந்து பேச அமெரிக்காவுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? "ஒரு இரும்புத் துண்டில் சிறு ஆணிகூட இந்த வெள்ளையன் செய்யவிட மறுக்கிறானே" என்ற ரோஷம் அமெரிக்காவுக்கு இருந்ததே ஒரு காலத்தில், அந்த ரோஷம் மட்டும் சீனாவுக்கு இல்லாமலா போய்விடும்!

நிலப் பரப்பில் ஆங்காங்கே முளைத்துள்ள பணக்காடுகளின் குறுக்கீட்டால் நீதியும், உண்மையும் தனித்தனி ஆறுகளாக ஓடினாலும் சரித்திர சமுத்திரத்தில் சங்கமமாகும் போது இரண்டு ஆறுகளும் கலந்து விடும் என்பதை அந்த காசுக்காரர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

# ஐயோ, கைகட்டி நிற்கிருரே!

டில்லிவாழ் செல்லப்பிள்ளைகளின் போக்கையும் பேச்சையும் பார்த்தால் அந்த மந்திரிமார்கள் மாநில மந்திரிகளை தங்கள் சக தோழர்கள் என்ருவது எண்ணுவார்களா என்ற சந்தேகம்கூடத் தோன்ற ஆரம்பித்துவிட்டது நம் போன்ருருக்கு! அதிலும் குறிப்பாக நிதி அமைச்சர் தேஷ்முக் சென்னை அமைச்சர்களை மதிப்பதேயில்லை. நோயாளியை மிரட்டும் டாக்டரைப் போலவும், ஊமைத்தனம் கொண்ட ஆசிரியர்களை பயம் காட்டும் தலைமை ஆசிரியரைப் போலவும் தேஷ்முக் நடந்துகொண்டே வருகிருர். சென்ற மாதம் மூன்ருவது வாரத்தில் சென்னையில் சுற்றுலா வந்த சிந்தாமணி தேஷ்முக்கிடம், சென்னை மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கென மத்திய அரசாங்கம் 32 கோடி ரூபாய் தந்துதவ வேண்டுமென சென்னை சர்க்காரின் நிதியமைச்சர் சுப்ரமணியம் கேட்டுக் கொண்டிருக்கிருர். இத்தனை ஆண்டு காலமும் வெள்ளையரின் அணைப்பிலே சுருண்டுகிடந்த தேஷ்முக் இவ்வளவு விரைவிலே எப்படி 'பரம்பரை காங்கிரஸ்காரர்' போல பேசப் பழகிக் கொண்டாரோ தெரியவில்லை. அலட்சியமாகவே பதில் சொல்லியிருக்கிருர், வரிகள் மூலம் வருமானத்தை வளர்த்துக்கொள்ளலாம் என்பதாக, விற்பனை வரியை அதிகரிக்கலாமென்றும், இரண்டாண்டுகளாக விவசாயம் வளம்பெற்றிருப்பதால் நில வருமானத்தை அதிகப்படுத்தலாமென்றும் தேஷ்முக் சொல்லியிருக்கிருர். வரிப் போட்டால் வருமானம் உண்டு என்று சொல்ல மாநிலத்திற்கு பத்து அமைச்சர்களும், தலைமைக்குப் பல அமைச்சர்களும் தேவையில்லைதான்.

திமிர்வாதம் பேசியும், துப்பாக்கியைக்காட்டியும் எத்தனை நாட்களுக்கு வரி வசூலிக்க முடியும் என்பதை சிந்தாமணியார் நினைத்துப் பார்க்கவில்லை. மொத்த மாநிலங்களில் அதிக மானவரியை டில்லிக்கு அளந்து தந்துவிட்டு கன்னத்தில் கைவைத்து நிற்கும் சென்னை மாநிலத்திற்குத்தான் தேஷ்முக் இவ்வாறு அலட்சியமாகப் பதிலிறுத்தியிருக்கிருர் 'வரிப் போட்டு வருமானத்தை வளர்த்துக் கொள்ளுங்கள்' என்று. காந்தியாரின் ஜீவலட்சியமாம் 'மது ஒழிப்பை' அமுலாக்கி 20 கோடிரூபாய் வருமானத்தை சூன்யமாக்கிக்கொள்ள கச்சைகட்டிக் கொண்டு முன்வந்த சென்னை மாநிலத்தைத்தான் மந்திரியார் துச்சமென மதிக்கிருர். மற்ற மாநிலங்களைக் காட்டிலும் டில்லிக்கு அதிகமான வரித்தொகையை 'கப்பத் தொகை' போல தருவதோடல்லாமல், மற்ற பெரும்பகுதி மாநிலங்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கும் மது வரியை உதறித் தள்ளியதாயிற்றே சென்னை என்று இந்தக் கருவூலக் காவலர் கருதினரில்லை.

மத்தியசர்க்காரிடம் சென்னை சர்க்கார் உதவித் தொகை கோரி கைகட்டி – வாய்பொத்தி நிற்கின்ற நேரங்களிலெல்லாம், சென்னை மாநிலத்தின் நலன் விரும்பிகள் அடிக்கடி மது விலக்கு நிலையை எண்ணுவதுண்டு; 'சென்னை மாநிலமே, சட்டரீதியாக மதுவை ஒழித்துவிட்டோம் என்ற சொற் பெருமைக்காக கோடிக்கணக்கான ரூபாய்களை இழந்து விட்டு ஏன் கைகட்டி நிற்கிருய்? உனது மடியிலே உண்மையிலே மது ஒழிந்து விட்டதா? கள்ளச் சாராயம் காய்ச்சி விட்டு கைதிக்கூண்டில் நிற்போர் எத்தனை பேர்? மதுக்கலயத்தோடு கைது செய்யப்பட்டும் 'மது விலக்கு' மனித உரிமையை பறிப்பதாகும் என வாதிட 'சுப்ரீம் கோர்ட்' வரை போகத் துடிக்கும் மாளிகைப் பிரபுக்கள் எத்தனை பேர்? உனக்கு மட்டும் ஏன் இந்த நிலை?" என்று எண்ணி எண்ணி கலங்கியதுமுண்டு. 20 கோடி ரூபாய் வருமானத்தையும் இழந்து நாம் ஏன் இரு கையேந்திப் பிழைக்க வேண்டும்? எங்கோ பிறந்த சிந்தாமணியார் வருமானத்தை வளர்க்க வரியை விதித்துக் கொள்ளுங்கள் என்று அலட்சியமாகச் சொல்லுவதையும் நாம்ஏன் சகித்துக் கொள்ள வேண்டும்? 'காங்கிரஸ் ஸ்ரீமான்களே, நீங்கள் வெள்ளையர் விதித்த நில வரியை கண்டித்தவர்களாயிற்றே நீங்களா இப்படிச்சொல்கிறீர்கள் என்று நமக்குக் கேட்கத் தெரியாமலில்லை; தெரியும். அதற்காகத்தான், சாறு அனைத்தையும் குடித்து மகிழ்ந்து கொண்டே, செலவு நேர்ந்தால் வரிப் போட்டுக் கொள்ளுங்கள் என்று மாகாண சர்க்காருக்கு 'சாக்குப் போக்கு' சொல்லும் டில்லியின் இணைப்பு வேண்டாமென்கிருேம். கைகட்டி நிற்பவரே, கனம் சுப்ரமணியரே, புரிகிறதா இப்போதாவது?

ஃ

# 'கோயில் பெருச்சாளிகள்' கூண்டிலேற்றப்படுவரா?

திருக்கோட்டியூர் பேர்போன விஷ்ணு தலம். வச்சிரக் கோட்டையென கோயிலைச் சுற்றி மூன்று அக்ராகாரங்கள். இரண்டு வாரங்களுக்கு முன்பு அந்த ஊர் கோயிலில் பெரும் திருட்டு ஒன்று நடந்து விட்டதாக நமக்கொரு செய்தி கிடைத்திருக்கிறது. ஊரில் இந்தச் செய்தி பெருத்த பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. விழா காலங்களில் கோயில் நகைகளை விக்ரகத்திற்கு அணிவிக்க ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்கு உரிமைப்பட்டிருந்த ஒரு சில பார்ப்பனர்கள் மட்ட உலோகத்தில் (வெள்ளி–பித்தளை) மாற்று நகைகள் செய்து கோயிலில் சேர்த்து விட்டு, கோயில் தங்க நகைகளை விற்று விட்டதாகவும் பேசப்படுகிறது. போலீசார் புலன் விசாரணை செய்து வருகிருர்கள். இது உண்மையானல் அந்தக் கோயில் பெருச்சாளிகள் கூண்டிலேற்றப்பட்டு கடுமையான தண்டனைக்குள்ளாக்க வேண்டும். திருக்கோட்டியூர் பொது மக்களும், உள்ளூர் தி. மு. க.வினரும் துப்புத் துலக்கும் பணியில் முனைந்துள்ளார்கள்.

இந்தச் செய்தியை திருக்கோட்டியூர் தி. மு. க. செயலாளர். கி. முத்துச்சாமியும், துணைச் செயலாளர் மு. இராவணனும் அனுப்பியுள்ளனர்.

# காலதேவா நீ அடிமையல்லவே!

கட்சிக் கொள்கை பரவ வேண்டும்; ஆக்கவேலைக்கான திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்ற எண்ணத்தில்தான் அனைத்துலக அரசியல் கட்சிகளும் மாநாடு கூட்டுகின்றன. காங்கிரஸ் இயக்கம் மட்டிலும் இதற்கு முற்றிலும் விதிவிலக்காக இருக்கிறதென்பதை ஆவடி மாநாட்டுக்குச் சென்றிருந்த நான் அங்கு நடந்த ஓரிரு நிகழ்ச்சிகளின் மூலம் அறிந்து கொண்டேன். தமிழ் நாட்டிலே நடைபெற்ற மாநாட்டில் தமிழைத் தேடுவாரே இல்லையென்ருல் இந்த ஆவடி காங்கிரஸ் அரசியல் ஆதிக்கத்தை நிலை நாட்டிக் கொள்ளக் கூட்டப்பட்ட 'மூன்று நாள் தேரோட்டம்' என்றுதான் நான் நினைக்கிறேன்.


'மக்கள் தலைவர்'களோ பந்தலிலே–திண்டுகளிலே சாய்ந்து கிடந்தார்கள்! மக்களோ மண்டை பிளக்கும் வெய்யிலில் சோர்ந்து கிடந்தார்கள். இந்த வேதனையான நேரத்தில்தான் செந்தமிழ் தொனிகேட்டு 'வந்தவர்கள்–வடவர்கள்' வெளியேறினார்கள். இந்த லட்சணத்தில் அடிக்கடி 'இந்தியா முழுதும் ஒன்றே' என்ற 'கோரஸ்' பாட்டு வேறு!

மாநாட்டுப் பந்தலிலேதான் இப்படியென்ருல் சாப்பாட்டு அறையிலாவது கொஞ்சம் அமைதி, கண்ணியம், நாணயம் வேண்டாமா அந்த பணியாக்களுக்கு? ஊஹூம்! மட்டரகம்! மட்டரகம்! இட்லியையும், சாம்பாரையும் பார்த்ததில்லை; சாப்பிட்டதில்லையென்ருல் அதற்காக காய்ந்த மாடு கம்புக் காட்டில் பாய்ந்தமாதிரியாகவா நடந்து கொள்வது! தமிழ் நாட்டவருக்காகத் தயாரித்து வைக்கப்பட்டிருந்த இட்லிக் காட்டில் எப்படியோ அதன் சுவை அறிந்த வடவர்கள் படையெடுத்து விட்டார்கள். இட்லிக்குத் தொட்டுக்கொள்ளத்தான் சாம்பாரா, அல்லது சாம்பாருக்கு அணைபோடுவதற்குத்தான் இட்லியா என்றுகூட புரியாத அந்த 'கனக விஜயர்'கள் 'சாப்பாட்டுக் களம்' அமைத்துவிட்டார்கள். தமிழர்கள் பாடு அதோகதியாகப் போய்விட்டது. சரி, ஆனது ஆகட்டும் என்று எண்ணி, இட்லியை மேய்ந்தவர்களுக்குத்தான் சப்பாத்தி, பூரியாவது இருக்குமே என்று தமிழர் பட்டாளம் வடநாட்டு உணவுப்பகுதிக்குள் புகுந்தது. அங்கே கிடைத்தது அடி, உதைதான்! 'இங்கே அல்ல உங்களுக்கு சாப்பாடு, இங்கே சேட்ஜிகளுக்குத்தான்' என்ருர்கள் அங்கிருந்த தொண்டர்கள்! உடனே சிறு குழப்பம் – சிலருக்கு அடி! அதுவும் நம்மவருக்குத்தான்!—மேடையிலே மட்டும் காந்தியார் படம் பெரிய அளவில்!

அதுமட்டுமா? முக்கியமான தலைவர் ஒரு தீர்மானத்தை பிரேரேபித்து இந்தியிலே பேசுவார்—அதை ஆதரித்துப் பேசும்படி பணிக்கப்பட்டிருப்பவருக்கோ இந்தி தெரியாது—தீர்மானத்தை பிரேரேபித்தவர் என்ன சொன்னர், அதை நாம் எப்படி ஆதரித்துப் பேசுவது என்ற குழப்பம்! ஆவடியில் இப்படி பல நிகழ்ச்சிகள்! வெட்கம்! ஒரே ரகளை! இந்த 'எழவு' குழப்பம் ஏற்படுமென்று எண்ணித்தானே என்னவோ புதிய காங்கிரசின் பாராளுமன்ற குழுவினர் ஐவரில் நால்வரை வடநாட்டுக்காரர் (நேரு–ஆசாத்–பண்டித பந்த்–மொரார்ஜி தேசாய்) களாகவே தேர்ந்தெடுத்திருக்கிருர்கள்! அதுவும், இன்னும்

● தொடர்ச்சி 10-ம் பக்கம்





## அழகி

நதியே! நடனப்பெண்ணே! ஆட்டக் காரியின் அபிநயக் கரம் போல் நெளிந்திடும் உன் அழகே அழகு. பெருகி வரும் நுரை வெள்ளமே! உருகிவரும் வெள்ளி ஒளியும் உனக்கீடாமோ! பண்ணமைக்கும் சிலம்பு நிகர் ஒலியும், வண்ணமெலாம் களிப்பு செய்யும் உருவம் பொருந்திய பொன்னி மாதரசி! வாழி நீ வாழி!

## காதலி

காதற் பெண்ணே! காவிரிக் கண்ணே! சிவப்பு தவழ் பவள இதழ் நங்காய்! உவப்பு நிறை காதலினுல் மண்ணழகன் வாயில், நீ உமிழ்ந்து விட்ட தாம்பூலந்தான் வண்டலெனும் பொருளோ!


## அன்னை

முற்ருத மழலைகளை வற்ருத கைநீட்டி வளர்த்திடும் தாயே! அன்புக் சரத்தின் அணைப்பினுல்—ஆணிப்பொன்மேனி அசைந்தாட, மாணிக்கப் பல் காட்டி சிரிக்கும் செந்நெற் குழவிகளைப் பார்த்திடுவாய்! இயற்கை இன்பம் சேர்த்திடுவாய்! அருமைத் தாயே! ஆற்றுமாதா! தெரிந்தோ தெரியாமலோ தீய களைகளுக்குப் பாலூட்டுகின்ருய்—இப்பிழையை உந்தன் திராவிட மாதாவிடம் கற்றனையோ! தொட்டிற் பழக்கமோ; அல்லது உன்னிடந்தான் அந்தத் தூயவளும் கற்றனளோ!

## அரசு

நன்மைகளைக் கொலு வைத்துக் குதூகலம் அடைவதிலே உனக்கு நிகர் யாருளர்? மஞ்சள் மணிக்கதிர் உன் மடியில் படுத்தே தலை நீட்டுகிறது. கரும்பின் கால்நனைத்து அதன் கணுவெல்லாம் சுவையேற்றுகிருய், வாழை—மா—பலா—இன்னும் வாழ்வுக்குத் தேவையெல்லாம் உன் கை பட்டே கருத்தரிக்கின்றன! பொது நலம் காணவே உழைத்திடும் உன்னை ஓர் அரசுக்குச் சமானமென்பேன்! நாட்டுக்குள் புகுந்து நலம் பாடும் நீயோர் நல்லரசு! கடமை புரிந்தபடி கடல் நோக்கிச் செல்லும் நதியரசே! கடலை, நீ தான் சென்று நிரப்புகிருய் என்று மட்டும் நினைத்து விடாதே! அப்படித்தான் இந்த வையகத்தில் அரசுபுரிவோர் நினைத்து விடுகிருர்கள். சமுத்திரத்து நீர் முகிலாக மாறியதால் நீ சந்தன வண்ண ஆருக ஓடுகிருய்! ஆறு போல்தான் அரசு! ஜன சமுத்திரத்தின் படைப்பு! நிலை கெட்டு ஓடினுல் அணை போட்டுத் தடுப்பார், நதியே உன்னை!

நாடாளும் அரசுக்கும் அக்கதிதான்
ஓடிப் போதே, இந்தப் பாடம் சொல்லி,
வாழ்ந்திடு நதியே! வாழ்ந்திடு! நதியே!



# காகிதப் படகு

அன்றைய தினம் சித்ரகான ஸ்டுடியோவே ஒரு குதூகலத்தில் ஆழ்ந்திருந்தது. அதிகாலையில் — அணிமலர்ச் சோலையில் ரீங்கார ஒலியோடு உலாவுமே வண்டுகள்! அதை நினைவுபடுத்தும் வகையில் தொழிலாளிகள் அங்கும் இங்குமாக அலைந்து கொண்டிருந்தனர்.

ஏனிந்த கோலாகலம்? என்றுமில்லா கோலாகலம்?

காரணம் வேறொன்றுமில்லை; குமாரி சவுந்தர்யாவுக்கு அன்றைய தினம் படப்பிடிப்பு நடந்து கொண்டிருந்தது. எனவேதான் முதலாளி—தொழிலாளி பிரச்சினைகளை சற்று நேரம் ஒதுக்கிவைத்துவிட்டு—தேதி பதினைந்து ஆகியும் இன்னும் சம்பளம் கொடுக்கப்படாமலிருப்பதைக் கூட மறந்துவிட்டு சகலமானவர்களும் உற்சாகக் கடலில் மூழ்கியிருந்தனர்.

பட முதலாளி பூர்ணலிங்கம் சவுந்தர்யாவுக்குப் பக்கத்திலே நின்று பணிவிடைகள் புரிவதில் லயித்திருந்தார். சவுந்தர்யா வாயைத்திறந்தாலே போதும்; வெளியே வந்து விழும் வார்த்தைகளைப் பிடிப்பதற்கு பூர்ணலிங்கம் தயாராகி விடுவார். அவள் காப்பி கேட்டால் போதும்: ஓவல்டின் கோப்பைகள் அவளைச் சுற்றி மொய்த்து விடும்!

சவுந்தர்யா மட்டுமென்ன சாதாரண ஸ்டாரா, என்ன? பச்சைக் கிளியாய் இருந்தால்கூட சுலபத்தில் பார்வையைத் திருப்பாத சினிமா உலகத்தில், அவள் எத்தனை காலமாகத் தெரியுமா இருக்கிருள்? இருக்கிருளாவது: கலா சாம்ராஜ்யத்தின் இளவரசியாக வல்லவா அவள் ஆட்சிபுரிகிருள்! அவளோடு 'மேக்—அப்' போட்டுக் கொண்டவர்களெல்லாம் இன்று 'அம்மா' வேஷம் போடுவதற்கு மட்டுமே லாயக்குள்ளவர்களாகிவிட்டார்கள்-இவளோ கதாநாயகியாக கலையூரில் காலெடுத்து வைத்தவள் கதாநாயகியாகவே இன்னும் நிலைத்துவிட்டாள்.

★

'ஊர்வசியோ! என்னோடு ஒன்றிவிட்ட உயிர்ப் பொருளோ!'—என்று கோஷித்தவர்களாய், அவளை வளைத்துக்கொண்ட விசிறிகள் ஏராளமாகப் பெருகிவிட்டனர்.

'பண்தாங்கும் மொழியினளே! கூர்அம்பு ஒறுக்கும் கண்ணினளே! சிங்காரப் பதுமையே! நீ சிரிக்கும்போது தரையில் உதிர்க்கும் முல்லை மொக்குகளை இதற்குமுன் எங்கே ஒளித்து வைத்திருந்தாய்? ...'—என்றெல்லாம் வார்த்தை மாளிகை கட்டும் வாலிபப் பட்டாளம் அவளை இன்னும் புகழ்ந்தபடிதான் இருக்கிறது.

அவளது புருவத்து அசைவிற்காக புவி வாழ்வையே பணயம் வைக்கத் துணிந்தோர் தொகை எண்ணித் துணியாது. 'அடியெடுத்து வைக்கும்போதே அழகெடுத்து வைக்கும் விநோதம் பார்'—என்று மூக்கிலே விரலை வைத்தவர்களாய் வியப்போர் கூட்டமும் நாளுக்கு நாள் பெருகிற்றே ஒழிய குறையவில்லை.

நடே அவள் புகழ்பாடும்போது ஸ்டுடியோ வட்டாரம் மட்டும் சும்மா இருக்குமா என்ன? அன்றைய குதூகலத்துக்கு இன்னெரு முக்கிய காரணமும் இருந்தது. ஐ. சி. எஸ். படிப்பதற்காக இங்கிலாந்து சென்றிருந்த பூர்ணலிங்கத்தின் மகன் குமாரலிங்கம்—சுருக்கமாக அவனை குமார் என்றே அழைப்பார்கள் — அன்று சித்ரகான ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்வதாக இருந்தான்.

'ஹார்ன்' சப்தம் கேட்டது. ஆமாம்: குமார் வந்துவிட்டான். ஒரு கையால் 'ஈவ்னிங் ஹேட்'டை அணைத்தபடி, மற்ருெரு கையால் 'வாக்கிங் ஸ்டிக்'கை சுற்றிக்கொண்டு குமார் 'செட்'டிற்குள்ளே நுழைந்தான்.

படப் பிடிப்பைப் பார்த்துப் போவதற்குத்தான் குமார் ஸ்டுடியோவிற்கு வந்தான்—ஆனால் அவனது உள்ளத் திரையிலே ஒரு பாவையின் படம் அழியாத ஓவியமாகப் பதிந்துவிடுமென்று அவன் எதிர்பார்க்கவேயில்லை!

குமார் தன்னுடைய அமெரிக்கப் பிரயாணத்தின்போது ஹாலிவுட் நட்சத்திரங்கள் பலரைப் பார்த்திருக்கிருன். கிரீட்டோ கார்போக்களையும், ரீட்டா ஹேவர்த்களையும் சந்தித்திருக்கிருன், ஆனாலும் சவுந்தர்யாவின் முகத்திலே ஒழுகும் 'தேஜஸை' — கண்கள் சிறை செய்து வைத்திருக்கும் காந்தத்தை — வாய்ச் சொற்கள் தேக்கிவைத்திருக்கும் தேனை — அந்த மேல்நாட்டு முகங்களிலே அவன் பார்த்ததேயில்லை.

சவுந்தர்யா-குமார் சந்திப்பு பல விபரீதமான முடிவுகளுக்கு விதை தூவுமென்று முன்பே தெரிந்திருந்தால் பூரணலிங்கம் அவர்களை ஒன்று சேரவொட்டாமலேயே தடுத்திருப்பார்.

என்ன செய்வது? போராடும் மனத்திற்கு பெருமூச்சால் சமாதானம் சொல்லி விட்டு குமார் நகர்ந்தான்.

★

குமார்தான் ஸ்டுடியோவை விட்டு நகர்ந்தானேயொழிய சவுந்தர்யா மட்டும் அவன் இதயத்தை விட்டு நகர மறுத்து விட்டாள்.

"லண்டன் படிப்பு, இப்படித்தான் கண்ட பெண்களுடன் காதல் செய்யச் சொல்கிறதா?"—என்று கேலிபேசியவாறே உள்ளே நுழைந்தான், அவனது நண்பன் நல்லசிவம்.

"சிவம்! அவள் எவ்வளவு அழகாய் இருக்கிருள் பார்த்தாயா? தேம்ஸ் நதியின் வளைவுகளை விட அவளது புருவத்து வளைவுகளில்தான் எவ்வளவு வசீகரம்! கயல் விழிகளை மூடியிருக்கும் அந்த இமைக் கதவுகளின்மேல் இயற்கை தீட்டியிருக்கும் கோடுகளைப் பார்த்தாயா?"

"நன்ருக இருக்கிறதப்பா. உனது படிப்பின் லட்சணம்! சிந்தித்து, சிந்தித்து அறிஞர் ஏறுகளின் நெற்றியிலே படிந்திருக்கும் கோடுகளைப் பற்றிப் பேச வேண்டிய நீ, கேவலம், ஒரு பெண்ணின் கண்ணோரத்துக் கோடுகளைப் பற்றியா பேசுவது? எனக்கு வெட்கமாயிருக்கிறது, குமார்!"

"எனக்கு அது வெல்லமாக இருக்கிறதே—நான் என்ன செய்யட்டும்?"—என்றபடி வார்த்தைகளை வளர்த்துக் கொண்டு போனுன், குமார். தன் வாதத்துக்கு ஆதாரம் தேட உமர்கயாம் போன்ற அன்னிய நாட்டு புலவர்கள் நூலிலே மூழ்கலானுன்.

★

நாட்கள் செல்லச் செல்ல குமாரின் உள்ளத்திலே சவுந்தர்யா அசையாத சமாதியாகிவிட்டாள். நூல் நிலையங்களிலே நுழைந்து உயர் எண்ணங்களை தேடியலைய வேண்டிய குமார் பைத்யக்காரனைப்போல ஒரு நடிகையின் போலி அழகை ஸ்பர்சிக்க வேண்டுமென்று துடித்தான்.

"சிவம்,—அவள்தான் நான் இத்தனை நாளும் கனவு கண்ட இலட்சியப்பெண்...சவுந்தர்யா மட்டும் என் மனைவியாகி விட்டால் என் வாழ்க்கைப் படகு எப்படிச் செல்லும் தெரியுமா?"

"குமார்-கவர்ச்சியான பொருள்களெல்லாம் வெறும் காட்சிப் பொருள்கள்தான் என்பதை உணராமல் பேசுகிருய்! வாழ்க்கைப் பிரயாணத்திற்கு நீ ஒரு காகிதப் படகைத் தேர்ந்தெடுத்திருக்கிருய் குமார்! பனித்துளிகள் பட்டாலே அமிழ்ந்துபோகும் அந்தப் படகா கொடும் சுருவையும், சூருவளியையும் தாண்டி உன்னை அழைத்துச் செல்லப் போகிறது?"

குமார் இதற்குப் பதில் பேசவில்லை. சவுந்தர்யாவோடு அவன் ஏறபடுத்திக் கொள்ளப் போகும் உறவு மழைக்காலத்தில் சிறுவர்கள் மிதக்கவிடும் காகிதப் படகு!—மலர்க்கரமே கையாடினுல்கூட சுக்கல் சுக்கலாக உடைந்துவிடும் கண்ணுடிப் பாத்திரம்!—இப்படி சிவம் உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகட்டுமே! அப்போது கூட குமார் தன்னுடைய எண்ணத்தை மாற்றிக் கொள்வதாக இல்லை.

"நான் என்ன செய்வேன்; என் உள்ளத்திலே ஊறியிருக்கும் கலா ரசனையும், கவிதா உணர்ச்சியும், நான் வளர்ந்த மேல் நாட்டு நாகரிகமுமே என்னை இப்படி ஆக்கிவிட்டது!"—என்று சமாதானம் கூற ஆரம்பித்து விடுகிருன், அவன்!

"சிவம்! நான் எப்படியாவது அவளை சந்திக்க வேண்டுமே" என்று திட்டம் போடுகிற அளவுக்கு குமாரின் மனோநிலைமை வளர்ந்து விட்டது.

★

காதல்பித்து பிடித்தவர்களை பூர்ணலிங்கம், தான் தயாரிக்கும் சினிமாப் படங்களில்தான் பார்த்திருக்கிருர். தன்னுடைய அருமருந்தன்ன புத்திரன் குமாரும் அப்படி ஆகிவிடுவானென்று அவர் கனவில்கூட நினைத்தது கிடையாது.

● தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ஏன்?

சித்திரச் சோலையிலே ஆர்ப்பாட்டம்!

ஆனுல்

தோட்டக்காரன் துயரம் துடைக்கப்படவில்லை!

தமிழூராம் 'ஆவடி'யிலே மாநாடு;

அங்கே

இலங்கைத் தமிழர் பற்றிய

தீர்மானத்தைக் காணேம்!

ஏன்?

# 1882-ல்!

1882-ல் மகேஸ்வரத்தில் ஒரு நாள்! "மகேஸ்வரத்தின் ராஜ கவுரவம் மயிரிழையில் தொங்குகிறது. எனது தாய்-சமஸ்தானத்து சிங்காரியாகி திவானோடு கூடிக் குலாவுகிருள். ஆங்கிலத் தூதரே, என் நெஞ்சு துடிக்கிறது. எப்படியாவது அந்தத் திவானை நீக்கிவிடுங்கள். நான் வயது வராதவன் என்பதற்காக இந்த 'லீலா விநோதங்களை' எல்லாம் அனுமதித்துத்தான் ஆகவேண்டுமா?" — இப்படி ஒரு கடிதத்தை எழுதி அந்த நேரத்தில் இந்தூரில் ஆங்கிலத் தூதராக இருந்த ஜெரால்ட் வெல்லெஸ்லியிடம் தந்திருந்தான் மகேஸ்வரத்து ராணியான அகல்யாவின் மகன். வெல்லெஸ்லிக்கு அந்தக் கடிதத்தில் நம்பிக்கையில்லை. உடனே அந்த இளைஞனை வரவழைத்துக் கேட்டார். அப்போதும் அந்த இளைஞன் கடிதத்தில் குறிப்பிட்டிருந்ததையே ஊர்ஜிதப்படுத்தினன். அரசுரிமைக்கு ஆசைப்பட்டுத்தான் வாலிபன் தாய்க்கு விபச்சாரிப் பட்டமும், தகைமை சான்ற திவானுக்கும் மானக் கேட்டையும் ஏற்படுத்துகிருன் என்பதை வெல்லெஸ்லி புரிந்துகொண்டாலும், மறுநாளே மகேஸ்வரத்திற்கு ஒரு அவசர உத்தரவு பிறப்பித்தார். அதன்படி அந்த திவானை விட்டல் மகாதேவ் அரண்மனைக்கு வராமலே அரசியல் காரியங்களைக் கவனித்து வரவேண்டியதாயிற்று. ஒன்றுக்குப் பலதடவை அரசியல் காரியங்களை முன்னிட்டு ராணி அகல்யா திவானின் இல்லம் சென்றிருக்கிருள். இதையெல்லாம் சான்றுகளாக்கி விட்டலை விரட்டிட வினயக்காரர்கள் பலர் சதி செய்தார்கள். இவையனைத்திற்கும் அந்த அப்பாவியான அகல்யாவின் புதல்வனை சூத்திரக் கயிருக்கிக்கொண்டார்கள். விட்டல் ராவால் இந்த வேதனைப் பாரத்தை தாங்க முடியவில்லை. வாழ்நாளில் அதுவரை யாருக்கும் பணிந்து பேசாத விட்டல் ராவ் அன்று இரவு அரசிளங் குமரனைச் சந்தித்து வாதாடினர். "மாதாவுக்கு மாசு கற்பிக்காதே, மாபாதகம் விளையும். உன் அன்னை அகல்யா இந்த மண்ணுக்குப் பெருமைதந்த திலகவதி" என்று மன்ருடினர். மெழுகுள்ளம் கொண்ட அந்த வாலிபன் 'எனக்கொன்றும் தெரியாது' என்று கைவிரித்துவிட்டான். அப்போதுதான் திவானுக்குத் தெரிந்தது இத்தனை காலமும் நடந்தவைகளெல்லாம் திரைமறைவிலிருந்தோர் நடத்திய சதி நாடகங்களென்று. அதன் பின்பு சில நாட்கள் சமஸ்தானத்தில் அமைதி நிலவியது.

திடீரென்று ஒரு நாள் திவானின் நெருங்கிய சொந்தக்காரர் ஒருவர் இறந்துவிட்டார். அரசாங்க அதிகாரிகளெல்லாம் திவான் வீடு சென்று துக்கம் விசாரித்தனர். ராணி கூட திவானைக் கண்டு தனது வருத்தத்தைத் தெரிவிக்கத் தவறவில்லை. சதிகாரர் தலைவனை அப்பாஜி தலால் என்பவன் மட்டும் சாவு வீட்டுக்கு வரவே இல்லை. சாவு முடிந்து பதினைந்து நாட்கள்கூட முடியவில்லை—

ஒரு நாள் திவான் அரசாங்க வேலையாக பகல் நேரத்தில் அரண்மனை செல்ல நேர்ந்தது. திவான் அரண்மனையின் தலைவாயிலில் காலை எடுத்து வைத்ததுதான் தாமதம். காவலர்கள், சிப்பந்திகள் அனைவரும் ஓடிவிட்டார்கள். திவானுக்கோ ஒன்றும் புரியவில்லை. சுற்றுமுற்றும் பார்த்தார். தூண் மறைவிலிருந்து கருப்புடை தரித்த ஒரு உருவம் திவானை நோக்கி உருவிய வாளுடன் வந்துகொண்டிருந்தது. திவானுக்கு திகில் ஒரு பக்கம், தீராத குழப்பம் மறுபக்கம். எவ்வளவோ தடுத்துப் பார்த்தார். அந்த மாறுவேடக்காரன் கேட்கவில்லை. மிகவும் கடினப்பட்டு திவானைக் கொன்றேவிட்டான். இதையெல்லாம் தூரத்திலிருந்து அரண்மனை அலுவலாளர்கள் பார்த்துக் கொண்டுதானிருந்தார்கள். என்ருலும் அவர்கள் திவானுக்கு உதவியாக வரவேயில்லை. திவானிடம் அந்த வேலையாட்கள் பாசமுடன்தான் நடந்துகொண்டார்கள்—மரியாதையும், மாருத அன்பும் காட்டத்தவறியதில்லை என்ருலும் அந்த சேவகர்கள் திவானைக் காப்பாற்ற வரவில்லை; கொலை நிகழ்ச்சியைப் பார்த்துக்கொண்டிருந்தம்! ஏன்? சேவகர்கள் நன்றிகெட்டவர்களா?

இந்த சோகச் சம்பவம் அகல்யாவின் விசாரணைக் கூடத்திற்கு வந்தது. திவானைக் கொன்றது சதிக் கூட்டத்தின் தலைவன் அப்பாஜீ தலால்தான் என்பது ருசுவாயிற்று; ஆனுல் சேவகர்களை உதவிக்கு வராதபடி தடுத்த ஹோல்கார் சமஸ்தான சடங்கிற்கு மட்டும் அகல்யாவினுல் தண்டனை தர முடியவில்லை. ஆமாம்; ஹோல்கார் சமஸ்தானத்தில் அந்தக் காலத்தில் கவைக்குதவாத ஒரு சாத்திர சம்பிரதாயம் இருந்திருக்கிறது. சாவு வீட்டைச் சேர்ந்தவர்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் அரண்மனைக்குள் நுழைந்தால் எல்லோரும் தீட்டுப் பட்டவர்களாகிவிடுவார்கள் என்ற அந்த சாஸ்திரத்திற்கு அடிமைப்பட்ட அந்த சேவகர்கள், திவான் சாவு முடிந்து பதினைந்து நாட்களுக்குள் அரண்மனைப் புகுந்ததை அறிந்ததும் ஓடிவிட்டார்கள். அப்பாஜீ, திவானைக் குத்திவிட்டான். சதிகாரனுக்கு சாத்திரம் சந்தர்ப்பம் தந்தது!

# இரு உண்மைகள்!

*'கரண்ட்' நிருபர் தரும் தகவல்!*

பண மூட்டைகள் நிரம்பிய பம்பாய் நகரில், பார்ப்பன பிச்சைக்காரன்-தான் பிச்சை எடுக்கும் போது தன் ஜாதி உயர்வைக் காட்டி—அதிகார தொனியில் உதவி பெறுவதை, கண்டிருக்க முடியாது. வேலையில்லா திண்டாட்டமும்-வாழ்வதற்கான வசதிகள் இல்லாத குறைகளும் ஒன்ருேடு ஒன்ருக பின்னி உச்ச நிலையிலிருக்கும் இச்சமயத்தில் – பிச்சை எடுத்தாவது தன் வயிற்றை நிரப்பிக் கொள்ள விரும்புகின்றவர்கள் தன் சுயமரியாதையை - கௌரவத்தை-மறக்கத்தான் செய்வர்.

ஆனுல், சென்னையில் – பலரிடம் கைநீட்டி-கெஞ்சி – தன் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் ஜாதி இந்து பிச்சைக்காரர்கள், பலரிடம் பல்லிளித்து பொருள் பெறும்போதும் கூட — தன் ஜாதி உயர்வைக் காட்டிக் கொள்ளும் காட்சி-மிக சாதாரணமானது - ஆச்சரியப் படவேண்டிய காட்சியுமல்ல.

வைதீக முறைப்படி தலையை மொட்டை அடித்துக் கொண்டிருந்த வயோதிக பார்ப்பன விதவை ஓர் நாள் என் இல்லத்திற்குவந்தாள். களைப்பும்கவலையும் அவள்முகத்தில் பிரதிபலித்தன. அவள் வயிருர உண்டு நாட்கள் பலவாகியிருக்கும். "பணம்-காசு எனக்கு வேண்டாம்-உண்ண ஏதாவது சிறிது தாருங்கள்" என மிக அடக்கமாக வேண்டினுள். தட்டில் சில இட்லிகள் வைத்து அவளுக்கு கொடுக்கப்பட்டது. அவள் அதை ஆசையோடு சாப்பிட ஆரம்பிப்பதற்குள் ஏதோ ஒரு சந்தேகம் அவளைத் தூண்ட 'இது பிருமணுள் வீடுதானு? என்ற வினவை எழுப்பினுள். இது பார்ப்பனர் வீடு இல்லை என்ற பதிலைக் கேட்டவுடன் பலகாரத்தை சாப்பிட மறுத்துவிட்டாள். ஆனுல் அரிசியும் — பணமும் கேட்க அவள் தயங்கவில்லை.

ஏக இந்தியாவின் ஐக்கியத்தை எதிர்த்து-வடநாட்டை எதிர்த்து- வெறுப்பும்—பொருமையும் அதிகமாக பரவ ஆரம்பித்துவிட்டது, தென்னிந்தியாவில்! இத்தகைய வெறுப்பு உணர்ச்சிகள் அரும்ப ஏதுவாக இருக்கும் பல முக்கியகாரணங்களில் மொழி பிரச்சனையும் ஒன்று—இந்தியை தென்னுட்டில் திணிக்க முயலுவது—வடவர்-தென்னவர் மீது ஆதிக்கம் செலுத்தசெய்யப்படும் சூழ்ச்சிகளில் ஒன்றே என்று மக்கள் நினைக்கின்றனர்.

சுதந்திர திராவிட நாட்டை சிருஷ்டிக்க விரும்பும் திராவிட இயக்கத்தினர்கள்தான்வடநாட்டார் மீது எல்லை மீறிய பகைமையைவளர்ப்பவர்கள். 'இந்தி ஏகாதிபத்தியத்தை' எதிர்க்கும் 'புனித'ப் போரில் இவ்வியக்கம் முன்னணியில் நிற்கிறது.

வட நாட்டாரால் நசுக்கப் படுகிருேம்என்றபயம்,மொழிப் பிரச்சனையினுல் மட்டுமல்ல—இன்னும் பல முனைகளிலும் அது பரவியிருக்கிறது. பொருளாதார சமத்துவத்தில்—மத்ய அரசாங்கம், தென்னிந்தியாவில் ஆலைகள் அமைத்து தொழில் வளத்தை பெருக்க தக்க திட்டங்களை தீட்டி, அமுலுக்கு கொண்டுவர போதுமான அக்கரை செலுத்துவதில்லை என்ற எண்ணம் வளர்ந்திருக்கிறது—பரவியிருக்கிறது.

தென்னிந்தியாவின் தலைசிறந்த தொழில் நிபுணர் ஜி. டி. நாயுடு அவர்கள் சில நாட்களுக்குமுன் ஒரு பிரசித்திப் பெற்றகாட்சிஒன்றை நடத்திக் காட்டினர். மோட்டார் ஆலையும்-டீசல் ஆலையும்-தென்னிந்தியாவில் ஏற்படுத்த நாயுடு அவர்களுக்கு மத்திய அரசாங்கம் அனுமதிதர மறுத்ததை எதிர்த்து, தன்வெறுப்புணர்ச்சிகளை காட்ட, பல்லாயிரக்கணக்கான மக்கள் முன், அவரால் கண்டுபிடிக்கப்பட்ட ரேடியோக்களை — கடிகாரங்களை—இன்னும் பல நூதனப் பொருள்களை தூள்தூளாக உடைத்தெறிந்தார்.


முன்னாள் சென்னை முதல் அமைச்சரும், முக்கிய தலைவர்களில் ஒருவருமான ஓ.பி. ராமசாமி ரெட்டியார் அவர்களும் வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துச் செய்யப்பட்ட கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொண்டார்.

அரசியல் துறையிலும், வடநாடு-தென்னுட்டின் மீது ஆதிக்கம் செலுத்துகிறதுஎன்கிற பயமும் நிலவுகிறது. தென்னிந்தியர்கள் தன் நாட்டிற்கு தேவையானவைகளைக் கேட்டு எழுப்பப்படும் குரல் சரியாகக் கவனிக்கப்படவில்லை என்று நினைக்கின்றனர். சிறிது நாட்களுக்கு முன் மத்திய அரசாங்க மந்திரி சபை மாற்றி அமைக்கப்பட்டபோது தென்னுட்டிலிருந்து புதிய பதவிக்கு யாரும் தேர்ந்தெடுக்கப்படவில்லை—மேல் பதவிக்கும் யாரும் உயர்த்தப்படவில்லை.

திறமை வாய்ந்த பல தென்னிந்தியர்கள் இருந்தும்கூட புதிதாக நியமிக்கப்பட்ட மூன்று மந்திரிகளிலும், உதவி மந்திரியாக இருந்து மந்திரி பதவிக்கு உயர்த்தப்பட்ட மூன்று நபர்களிலும், தென்னுட்டை சேர்ந்தவர்கள் யாரும் இல்லை.

வடநாட்டு ஆதிக்கத்தின் விளைவுகளிலே இதுவும் ஒன்று என்றே மக்கள்நினைக்கின்றனர்.

— பம்பாய் 'கரண்ட்'




# ★ முயற்சி தந்த பரிசு! ★

## சிங்கத் தம்பிகளே! தங்கத் தங்கைகளே!

"அண்ணா! எனக்கொரு தங்கை பிறந்திருக்கிறாள். ஆனால்...ஆனால்...அதை நினைத்து சிரித்துச் சிரித்து மகிழ வேண்டிய எனக்கு ஒரே கவலை' ஒரே ஏக்கம்! ஏன் தெரியுமா? அவளுக்கு ஒரு கையே இல்லை அண்ணா" என்று வழக்கமாக கடிதம் எழுதிவரும் குமார் என்ற சேலத்துத் தம்பி, இம்முறை வருத்தத்தோடு கடிதம் எழுதியிருக்கிறான்.

தம்பி கவலைப் படுவதிலே தவறில்லை...அவனது நிலைக்கு நாமும் வருந்தத்தான் செய்கிறோம். ஆனால்...? அழுது என்ன பலன்? ஒரு கை இல்லை என்றால் வழியே இல்லையா? வாழவே முடியாதா?...நிச்சயம் வாழலாம்; இரண்டு கையோடு உலவுபவர்கள் சாதிக்க முடியாதவைகளை எல்லாம் சாதிக்கலாம்; அதற்கு ஒரே கருவி-முயற்சிதான்!

ஒரு கை என்ன; இரண்டு கைகளுமே இல்லாதுதவித்த ஒரு லண்டன் நகரத்து சிறுமி, உலகம் புகழ பெருமையடைந்த கதையை —அல்ல; உண்மை நிகழ்ச்சியை இவ்வாரம் சொல்லுகிறேன். அதுவே அந்தத் தம்பிக்கு நல்ல பதிலாக இருக்கும்: தங்கையை முன்னுக்குக் கொண்டுவர நல்ல பாடமாகவும் இருக்கும்; படியுங்கள்:

★

பாவம், அந்தச் சிறுமியைக் கண்டு எல்லோரும் பரிதாபப் பட்டார்கள். "அடடா" என்று அனுதாபப்பட்டார்கள். ஒரு சிலர் கண்ணீர் விடவும் செய்தார்கள். ஏன்? அவளுக்கு அம்மா இல்லையா? அப்பா இல்லையா? இருவரும் இல்லை தான். ஆனால்... அதைவிட மிகப்பெரிய பயங்கரம்-பெரிய சோகம்! சொல்லட்டுமா?... அவளுக்கு இரண்டு கைகளுமே இல்லை. அப்பப்பா! நினைக்கவே பயமாக இருக்கிறதல்லவா? அப்பாவைப் பிரிந்து — அம்மாவைப் பறிகொடுத்து- இரண்டு கைகளையும் இழந்து- நடுத்தெருவிலே நின்றுகொண்டிருந்த அந்தச் சிசுவைப் பார்த்து எல்லோருமே துக்கப் பட்டார்கள். ஆனால்... அது சிந்திய கண்ணீரைத் துடைக்க யாருமே முன்வரவில்லை!

இப்படி அனாதையாகத் தடுமாறிய பெண்தான் ஒரு நாள் உலகம் புகழும் மேதையானாள்-பெரிய சித்திரக்காரியானாள்— என்று சொன்னால் நம்புவதற்குத் தயக்கமாக இருக்கிறதல்லவா? "பொய்! பொய்! சுத்தப் பொய்!" என்றும் சிலர்சொல்லுவார்கள். ஆனால்...... அது உண்மைதான். அந்தச் சிறுமியின் கதை அப்படித்தான் இருக்கிறது. அவளை முன்னுக்கு கொண்டுவந்த முயற்சியும் அதைத்தான் உலகத்துக்குச் சொல்லுகிறது. படியுங்கள்:

நடுத்தெரு வழியே தடுமாறி நடந்துகொண்டிருந்த அந்த சாராவை (அதுதான் அவளது பெயர்) ஒரு நாள் ஒரு சர்க்கஸ் காரன் பார்த்தான். ரொம்பவும் பரிதாபப்பட்டான். அந்தப் பெண்ணை எப்படியும் ஆதரிக்க வேண்டும் என்று முடிவு செய்தான். உடனே தன்னுடன் சர்க்கஸ் கம்பெனிக்குத் தூக்கிச் சென்றுவிட்டான். ஆதரவுக்கு இடம் தேடிக் கொண்டிருந்த சாராவுக்கு ஒரே உற்சாகம். அவன் சொல்லித் தந்த வேலைகளை 'கப கப'வென்று கற்றுக் கொண்டாள். மூன்றே மாதத்தில் அவள் சர்க்கஸ் மேடையில் தோன்றிவிட்டாள் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்! கைகள் இல்லாமல் வெறும் கால்களின் உதவியினாலேயே அவள் செய்யும் வித்தைகளைக் கண்டு ஊரே வியந்தது.

அந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டாள் ஒரு பணக்காரி. உடனே பார்த்துவிட எண்ணினாள். அன்றே சர்க்கசுக்கும் சென்றாள். அந்தப் பெண்ணின் திறமையைப் பார்த்து திகைத்தேவிட்டாள். அதே சமயம் அந்தப் பெண்ணின் மேல் இரக்கம் தோன்றியது. "பாவம், என்றைக்கு இருந்தாலும் இந்தப் பெண்ணுக்கு ஆபத்து ஏற்படத்தான் செய்யும். கொஞ்சம் தவறினாலும், உயிருக்கே அபாயமல்லவா? அவளை நான் கொண்டுபோய்

## குழந்தை இலக்கிய மலர்

குழந்தை எழுத்தாளர் சங்கத்தாரால் வெளியிடப்பட்டிருக்கும் "குழந்தை இலக்கிய மலர்" கிடைக்கப் பெற்றோம்.

தமிழகத்து தம்பி தங்கைகளுக்கு நல்லவை கூற பள்ளிக் கூடங்கள் இருப்பதுபோல்— அன்புடன் பேசி நல்வழி காட்ட பெற்றோர்கள் இருப்பதுபோல் —இந்தச் சங்கம் இயங்கி வருகிறது. குழந்தைகளின் நலத்தில் உண்மையிலேயே ஆர்வம் கொண்ட குழந்தை எழுத்தாளர்கள் பலர் இதில் அங்கம் வகிக்கிறார்கள். குழந்தை இலக்கியத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் செய்துவரும் நற்காரியங்களில் ஒன்றாகவே இந்த மலர் வந்திருக்கிறது. மலர் மனதைக் கவருகிறது. இதழ்கள் ஒவ்வொன்றும் கருத்துமணத்தைப் பரப்புகின்றன.

அதை வெளியிட்ட குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பெருந்தொண்டினைப் போற்றுகிறோம்; "வளரட்டும்" என்று வாழ்த்துகிறோம்.

வளர்த்தால் என்ன?" என்று எண்ணினாள். உடனே அந்த சர்க்கஸ்காரனிடம் சென்று தனது ஆவலை வெளியிட்டாள். அவனும் 'சரி' என்றான். அன்றே சாரா சீமாட்டியின் வீட்டுக்கு வந்துவிட்டாள்.

சீமாட்டிக்கு அவள்மேல் எல்லையில்லா பிரியம். அவள் கேட்டதை எல்லாம் செய்து தருவாள். அவள் உதடு அசைந்தால் போதும்; சீமாட்டியின் கைகள் அதை வாங்கித் தந்து விடும்.

இப்படியிருக்கும்போதுதான் சாரா ஒரு நாள் தனது வளர்ப்புத் தாயிடம் தன் ஆசையைச் சொன்னாள். அது என்ன ஆசை தெரியுமா? நினைத்தால் 'ஐயோ, பாவம்!' என்போம்; அவள் விரும்பியது ஓவியம் எழுதிப் பழக. கைகள் இல்லாதவள் இந்த ஆசைப்படலாமா என்று சிரிக்கத் தோன்றுகிறதல்லவா? ஆனால், அந்தச் சீமாட்டி சிரிக்கவில்லை; சாராவின் ஆசையைக் கெடுக்கவும் இல்லை. அன்றே அவள் ஓவியம் கற்க ஏற்பாடு செய்தாள்.

பெரிய ஓவியர் ஒருவரின் வீட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள் சாரா, ஓவியருக்குப் பக்கத்திலேயே இருந்து கவனித்தாள். கூர்ந்து கவனித்தாள். கொஞ்சம்கொஞ்சமாகப் பழகினாள். "கைகள்தான் இல்லையே, எப்படி?" என்கிறீர்களா? பற்களால்! ஆமாம்; பற்களால் தான் அந்தப் பெண் பிரஷைப் பிடித்தாள்; ஓவியம்எழுதினாள்; ஆனால்......அவள் முதலில் எழுதிய ஓவியங்கள் எல்லாம் ஒரே ஆபாசமாக இருந்தன. அதைப் பார்த்த சாராவே வெட்கப்படுவாள். கிழித்து குப்பைத்தொட்டியில் போட்டு விடுவாள். ஆனால் முயற்சியை இழக்கவில்லை. எழுதினாள்; எழுதிக் கொண்டேயிருந்தாள்;

தொடர்ச்சி 10-ம் பக்கம்

## ★ தலையங்கம் தொடர்ச்சி...

விரும்புவதைப் போல ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு 'புராணம்' உருவெடுத்தால் நாட்டு நிலைமை என்னாவது?

பின்னர் காளியின் அருளால் கட்டபொம்மன் வாளெடுத்தான் என்று வரலாற்றிலே எழுதப்படும்; வ. உ. சிதம்பரனார் சிறைச்சாலையிலே செக்கிழுத்தபோது செந்தில் வேலவன் தோன்றி அவரது சிரமத்தைப் போக்கினான் என்று கதை கிளப்பப்படும்; திருப்பூர் குமரன் கையிலே மூவர்ணக் கொடியோடு மண்ணிலே சாய்ந்தகாலை அவனை வான ரதத்திலிட்டு உமையொரு பாகன் கைலாயத்துக்கு அழைத்துச் சென்றான்—என்று கற்பனை உருவாகும்.

குள்ளநரி உள்ளம் படைத்த சிவராமன் இதைத்தான் விரும்புகிறாரா? இப்படிப்பட்ட உண்மையின் பகைவர்கள்தானா நீங்கள் பெற்ற சுதந்திரத்தின் பெருமையைப் பறைசாற்ற வேண்டும்?

தேசியத் தோழர்களே! தென் புலம் உதித்த திறல் மறவர்களை— தியாகச் சின்னங்களை தயவு செய்து மறைத்து விடுங்கள்: நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் கற்பனை மெருகேற்றி அவர்களது 'மனிதத் தன்மை'யை—புனித உணர்ச்சியை— போக்கிவிடாதீர்கள்!

—சுதந்தர புராணம் தீட்டும் பண்டித ரத்னங்களுக்கு இதைத்தான் நாம் வேண்டுகோளாக்க வேண்டியிருக்கிறது! ஃ

## தேன் நிலவே......

1-ம் பக்கத் தொடர்ச்சி

சித்திரை நிலவில் — செண்பகத் தோட்டத்தில் — தெற்கு மூலையில்-காத்திருந்தால் வந்து சேருவேன் என்று சொல்லி, வெளியூர் போயிருக்கும் காதலனைப் பார்த்து விட்டால் போதும்; அவளைப் பிடித்திருக்கும் நோயெல்லாம் பறந்து விடும். பாவம்! மகளுடைய காதல் நோயை அறியாத அன்னையோ மகேஸ்வரனுக்கு பூசை போடப் போகிறாள் !

நீண்ட நாட்களுக்குப் பிறகு அன்றிரவு அவள் காதலனைச் சந்தித்தால், அந்த சந்திப்பிலே அவளை ஆட்கொண்டிருந்த சஞ்சலமெல்லாம் ஓடிப்போகும். பொழுது விடிந்ததும் மூங்கில் தோளோடு-விரிந்த கண்களோடு மீண்டும் பழைய நிலையில் தன் மகளைப் பார்த்துவிட்டால் தாய் என்ன நினைப்பாள்? காதலன் வரவால் மகளின் நோய் தீர்ந்த செய்தி தெரியாமல்; வேலனுக்குப் போட்ட பூசை வெற்றி அளித்து விட்டது—வியாதியைத் தீர்த்து விட்டது-என்றுதானே நம்புவாள்! அந்த நம்பிக்கை பூசாரிக்கும், அவன் விதைத்துவரும் மூட நம்பிக்கைக்கும் அல்லவா வெற்றி தேடித்தரும்!

தமிழகத்துக் காதல் மடவார் அந்த 'வெற்றி'யை விரும்பவில்லை — "காதலன் அன்றிரவு வராமல் எனக்கு கொடுந் துன்பம் இழைக்கட்டும்; அந்தச் சோகப் பெருஞ் சுமையை நான் தாங்கிக் கொள்கிறேன். என்னுடைய அன்பரைக் காணாது நாளையும் வருந்துவேன்; என் உடல்நிலை மாறாதது கண்டு வேலனுக்கு இட்ட பூசை விழலுக்கு இறைத்த நீர் என்று அன்னை எண்ணட்டும்-பூசாரி ஒரு போலி வேஷக்காரன் என்கிற உண்மை மேலோங்கட்டும்"-என்று நினைத்து காதலனைப் 'திரும்பிப் போ' என்று சொல்லத் துணிகிறாள்.

இதோ கவிதை நடையிலே அந்த சுயமரியாதைச் செல்வி மொழிவதைக் கேளுங்கள் :

வெறியென உணர்ந்த வேலன் நோய் மருந்து
அறியான் ஆகுதல் அன்னை காணிய
அரும்படர் எவ்வம் இன்று நாம் உழப்பினும்
வாரற்க தில்ல தோழி...
இலங்குமலை நாடன் இரவினானே.

★

### பிறைவானம்......

★ 9-ம் பக்கத் தொடர்ச்சி

*பற்கள் சோர்ந்து போகும் வரை எழுதிக் கொண்டேயிருந்தாள்.*

*அந்த முயற்சிதான்-சோராத உழைப்பு தான்—முதல் முதலாகவே அவளுக்கு ஒரு பெரிய பரிசைத் தேடிக் கொடுத்தது. லண்டனில் ஒரு பெரிய சித்திரப் போட்டி நடைபெற்றது. பிரபலமான பல ஓவியர்கள் அதில் கலந்து கொண்டார்கள். ஆயிரக் கணக்கான ஓவியங்கள் குவிந்தன. அவைகளுக்கு மத்தியில் சாராவின் ஓவியம் ஒன்றும் இருந்தது. அந்த ஓவியம்தான் அவளுக்கு போட்டிப் பரிசையும் தந்தது. தங்கப் பதக்கத்தைப் பரிசாகப் பெற்ற போது அவள் அழுதாளாம். அதைப் பார்த்த அவளது வளர்ப்புத் தாய், "பரிசு பெற்றிருக்கும் போது ஏன் அழுகிறாய்?" என்று கேட்டாளாம்.*

*"என் முயற்சியின் பலனைத் தொட்டு மகிழ்வதற்கு என்னிடம் கைகள் இல்லையே!" என்றுகூறி மீண்டும் அழுதாளாம்.*

*அந்தப் பரிசுக்குப் பிறகு அவளுக்கு மீண்டும் அநேக பரிசுகள் கிடைத்தன. புகழ் மாலைகள் குவிந்தன. இங்கிலாந்திலேயே அவள் மிகப்பெரிய ஓவியக்காரியானாள். இப்போது லண்டன் நகரத்து அரண்மனையை அலங்கரிக்கும் அநேக சித்திரங்கள் அவள் எழுதியவை தானும்.*

*அவளது சித்திரங்கள் ஒவ்வொன்றும் உலக நீதிகளையும், உண்மைகளையும் விளக்குகின்றனவாம். அவை நமக்கும் ஒரு மிகப் பெரிய உண்மையைச் செல்லுகின்றன. 'முயற்சிமுழுப் பலனைத் தரும்' — சாராவின் வாழ்க்கை சொல்லும் இந்தப் பாடத்தை நாம் மறக்கக் கூடாது!*

—சொர்ணம்

### காலதேவா......

5-ம் பக்கத் தொடர்ச்தி

*ஐந்தாவது நபரின் பெயர் அறிவிக்கப்படவில்லை. அந்த ஒரு நபராவது தமிழ் நாட்டுக்காரராக இருப்பாரா என்பது சந்தேகம்தான்! அப்போதாவது ஆவடி நடத்திய காவடிகளுக்கு 'சுய நினைவு' வருமா?*

*இதையெல்லாம் அறிந்தும் தட்டிக்கொடுத்தால், நரி மேல் விழுந்து கடிக்கத்தானே செய்யும்? என்னமோ 'புண்ணியவான்'களின் ஆட்சி நடக்கிறது. ரஜ – கத-துரகபதாதிகளை ஆவடிக்கழைத்து ஒரு 'களியாட்டம்' நடத்திவிட்டுப் போய்விட்டார்கள்! போகட்டும்! அதற்காக, காலதேவனுமா அவர்களுக்கு அடிமைப் பட்டவன், இல்லையே!*

★

### காகிதப்......

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

பூர்ணலிங்கம்கூட கொஞ்சம் மறுமலர்ச்சி நோக்கம் கொண்டவர்தான். இல்லாவிட்டால் தான் பெற்ற ஒரே மகனை சீமைக்கு அனுப்புவாரா? இருந்தபோதும் கூட தன் மகன் இப்படி பைத்தியமாக அலைவது கண்டு அவர் மனம் கூசினார். 'அவளுக்கு பங்களாவும் பியூக் காரும் இருந்துவிட்டால் மட்டும் போதுமா? என் கால் தூசியை துடைப்பதற்குக்கூட அவளுக்கு யோக்யதை கிடையாதே!'-என்று முணகினார் பூர்ணலிங்கம். இந்த நேரத்தில் சவுந்தர்யாவை விரோதித்துக் கொண்டால் படப்பிடிப்பு மட்டுமல்ல; தன் பையனுடைய வருங்காலம் கூட பாதிக்கப்பட்டு விடுமென்று அவருக்கு நன்றாகத் தெரியும். எனவேதான் அவர் ரகசியமாக நல்லசிவத்திற்கு ஆள் அனுப்பினார்.

சிவம் வந்த சில வினாடிகளுக்கெல்லாம் இரும்புப் பெட்டி திறக்கப்படும் ஓசை கேட்டது. பின்னர் கார் புறப்பட்டது, சவுந்தர்யாவின் வீடு நோக்கி...அதன் பிறகு...?

★

பொழுது விடிவதற்கு முன்னரே குமார் நிலைக்கண்ணாடியின் முன்னர் நின்று கொண்டிருந்தான். கழுத்துச் சுருக்கை இழுத்துக் கொண்டு, மூக்குக் கண்ணாடியைச் சரிசெய்து கொண்டு ஒரு முறை தன்னை அழகு பார்த்துக் கொண்டான் குமார்!

"சவுந்தர்யாவோடு நான் என்ன பேசுவது, சிவம்...!" வேடிக்கையாகவே கேட்டான் குமார்,

"நீ ஒன்றும் பேசவேண்டாம், எல்லாம் உங்கள் கண்களே அடியெடுத்துக் கொடுக்கும்"—சிரித்துக் கொண்டே பதில் சொன்னான், சிவம்.

நேரம் ஓடியது. குமாரி சவுந்தர்யாவின் வீட்டிலே எல்லோரும் ஆச்சர்ய வெள்ளத்தில் மூழ்கியிருந்தனர். காரணம். அன்று அதிகாலையில் சவுந்தர்யா முதலாளியின் மகன் குமாருக்கு பேட்டியளிக்கப் போகிறாள், அதுவும் எங்கு? தன்னுடைய தனி அறையிலேயே அவனைப் பார்த்துப் பேசப்போகிறாள்.

இதில் ஆச்சர்யப் படுவதற்கு என்ன இருக்கிறது?

சவுந்தர்யா விடிகாலையிலேயே படுக்கையை விட்டு எழுந்தால் கூட காலை பத்து மணிவரை அவள் அன்னியர் ஒருவரையும் பார்க்க மாட்டாள். உடையலங்காரம் செய்து கொள்ள அவ்வளவு நேரம் பிடிக்கும் அவளுக்கு! இந்த நிலையில் பொழுது விடியப் போகும் நேரத்தில், அந்த நட்சத்திரம் மேல்நாடு சென்று வந்த மேதையொருவனை சந்திப்பதாக இருந்தால் வீட்டிலுள்ளோருக்கு ஆச்சர்யமாக இருக்காதா, என்ன!

குறித்த நேரத்தில் கார்வந்து நின்றது. பங்களாவினுள்ளே குமார் நுழைந்தான். வீட்டிற்கு முன்னேயுள்ள சோலையினழகை ரசித்தபடி, சேலை நிகர்த்த சவுந்தர்யாவின் விழிகளை, தன் விழிகள் சந்திக்கும்போது தன் நிலை என்னவாகுமோ என்று எண்ணங் கொண்டவனாய், அவன், அவளது தனியறைக்குள்ளே நுழைந்தான்;

அங்கே கண்ட காட்சியை அவனால் நம்ப முடியவில்லை. அதோ கட்டிலிலே சாய்ந்தபடி உன்ன உருவம்தான் பேரழகின் உறைவிடமா? ஒரு முறை விழிகளைக் கசக்கி விட்டுக் கொண்டான், குமார்.

இவனைக் கண்டதும் சவுந்தர்யா வெளிச்சத்திற்கு அருகில் வந்து நின்றாள்.

அய்யகோ! கோரம்! கோரம்! மேகங்களிடையே நெளிந்தோடும் மின்னலைப் போல ஒளிசிந்தும் கண்களெங்கே?

வேங்கையின் மேலுள்ள கோடுகள் அந்த விலங்கின் வீரத்தை விளம்புவதைப்போல், இவளுடைய கடைக்கண் கோட்டில் காந்தம் இழைத்திருப்பதாகப் புகழ்ந்தானே அந்த எழிற் கோடுகள் எங்கே? எங்கே?—

'இதோ'—என்று கை நீட்டினாள் சவுந்தர்யா. விரல் காட்டிய திசையில் மையெழுதும் பென்சிலொன்று அவனைப் பார்த்துச் சிரித்தது. பவுடரும், ஸ்நோவும் பாரீஸ் நகரத்து பரிமளப் பொடிகளும் காட்சி கொடுத்தன.

அருகில் சென்று, பார்த்தான் அவளை. நிலாப் பதுமையா, அவள்? இல்லை; இல்லை; மூளி; மூதேவி; மேனி மினுக்கி! அதற்கு மேல் அவளைத் திட்டுவதற்கு அவனுக்குவார்த்தைகள் கிடைக்கவில்லை.

"பேன் நாறி வீழ் குழலைத் தேனென்றும். பீளை ஒழுகும் விழியை நீலமென்றும், மேல் நாறும் சளிமூக்கை எள்ளுப் பூவென்றும், வெறுங் குறும்பிக் காதை எழில் வள்ளை என்றும், ஊன் நாறும் ஊத்தைப் பல் வாய் உதட்டை ஒளி முல்லை செவ்வாம்பல் கோவை என்றும். தோல் நாறும் கன்னம் கண்ணாடி என்றும்" வர்ணித்த அவன் புலமையுள்ளம் வெட்கித் தலைகுனிந்தது.

"காகிதப் படகையா நான் வாழ்க்கைச் சாதனமாய் தேர்ந்தெடுத்தேன்? இல்லை; இல்லை, நீருள்ளே மூழ்கியிருக்கும் திமிங்கலத்தின் முதுகையல்லவா, தோணி என்று நம்பி ஏமாந்திருக்கிறேன்," குமார் உரத்த குரலில் சப்தம் போட்டான்; பின்னர் ஓடி விட்டான்!

தூங்கி விழித்த சவுந்தர்யாவை கட்டிளங் குமரியாக்க 'மேக்-கப்' சாதனங்களுடன் பணிப்பெண் ஒருத்தி வாசலிலே காத்திருந்தாள். அவள் சிரித்தபடியே கண்ணாடியின்முன் போய் நின்றாள், குமாருடைய பேய்க் கூச்சல் மட்டும் அந்த அறையில் எதிரொலித்தபடியே இருந்தது.

★

### வருந்துகிறோம்

விருதை தி. மு. க. பிரமுகரும், நற்பணியாளருமான திரு எம். எஸ். பி. எஸ். பெரியசாமி அவர்களின் மறைவு கேட்டு பெரிதும் வருந்துகிறோம். நமது அனுதாபத்தை அன்னவரின் குடும்பத்தாருக்கும் நண்பர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

★

'மதராஸ் மெயில்' பத்திரிகை ஆசிரியர் திரு. எ. எ. ஹெயில்ஸ் 22-ம் தேதி இயற்கை எய்தியது கேட்டு திடுக்கிட்டோம். நாற்பதாண்டு கால பத்திரிகை அனுபவம் பெற்ற ஹெயில்ஸ் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபம் அன்னாரின் குடும்பத்தாருக்கு உரித்தாகுக.

# காம்ரேடுகளுக்கு ★ அர்ப்பணம்! ★

ரஷ்யப் பெருந்தகை லெனின் அவர்களின் மதத்தைப் பற்றிய கருத்துக்கள் இவை. 'லெனின் எங்கள் தலைவர்' என்று பெருமையுடன் சொல்லிக் கொள்ளும் பொதுவுடமைக் கட்சியைச் சேர்ந்த 'ஜீவா' போன்ற 'புதிய பாகவதர்கள்' மதத்திற்கு வக்காலத்து வாங்குவது முறை தானா என்று சிந்தியுங்கள்—சிந்தித்து தேவைப்படும்போது புதிய பாகவதர்களுக்கும் இதைக் காணிக்கையாக்குங்கள்.

மதம் என்பது பிறருக்கு உழைத்து வறுமைப் பட்டு, தாழ்த்தப் பட்டு, அடிமைப் பட்டுக் கிடக்கும் மக்களை உற்பத்தி செய்யவும், அவர்களை விடுதலையடைய வொட்டாமலும், தலையெடுக்க வொட்டாமலும், அழுத்திவைக்கவும் ஏற்பட்ட சாதனங்களில் மிக முக்கியமானதென்றாகும்.

★

பாடுபட்டுழைக்கும் மக்களுக்கு மதம் உபதேசிப்பதென்ன வென்றால்,

"வாழ்நாள் முழுதும் வறுமையிலும், அன்னியர் கொடுமையிலும், துன்பப்படுகிறவர்கள் தங்கள் துன்பத்தை அமரிக்கையாகப் பொருத்துக் கொண்டிருந்தால் அவர்கள் காட்டும் பொறுமைக்குத் தகுந்தவாறே அடுத்த பிறப்பில்—அல்லது மேலுலகில் பொன்றாத இன்பவாழ்வை (நற்கதியை) பெறுவார்கள்" என்ற நம்பிக்கையை மக்கள் உள்ளத்தில் புகுத்துவதே யாகும். பிறருடைய உழைப்பால் செல்வத்தைப் பெருக்கிப் பிழைக்கும் வஞ்சக முதலாளி கூட்டத்தார்க்கு மதம் உபதேசிப்பதென்ன வென்றால்,

"செல்வவான்கள் (ஏழைத் தொழிலாளிகள் தங்கள் உழைப்பிற்குத் தகுந்த பலனையடைய விடாது, அவர்களுக்கு நியாயமாய்க் கிடைக்கவேண்டிய பலனை இப்பொழுதுள்ள முதலாளிகளின் அரசாங்கச் சட்டமாகிய கொடும் முறையால் கொள்ளையடித்து) பலவகைகளிலும் பொருள் சம்பாதித்து அனுபவித்து வரும் தங்கள் செல்வத்தில் ஒரு சிறுபாகத்தை (கோவிலென்றும், குளமென்றும், சத்திரமென்றும் சாவடியென்றும் செலவு செய்தலோடு, குருமார்களுக்கும், புரோகிதர்களுக்கும், பிராமணர்களுக்கும் ஊரார் உழைப்பில் வாழவிருக்கும் சோம்பேறிகளுக்கும்) தானதர்மம் செய்து விட்டால் அதுவே அவர்கள் பொருள் திரட்டுவதற்கும், வேறு பலவற்றிற்கும் செய்த கொடுமைகளுக்குத் தக்க பரிகாரமாகும்" என்பதுவாகும். இக்கொள்கையானது (மிராசுதார், முதலாளிமார் முதலியோர்கள் மற்றவர்களை வாட்டி வதைத்து வஞ்சித்து ஏமாற்றிக் கொள்ளை அடிப்பதை சரியென்று ஒப்புக் கொள்வதோடு) அவர்கள் 'மோக்ஷலோகம்' போவதற்கு வெகு சுலபமான கிரயத்தில் "அனுமதிச்சீட்டு" (டிக்கட்)ம் கிடைத்து விடும் என்கின்ற நம்பிக்கையை மக்களுக்குப் புகுத்துவதுமாகும்.

★

சமதர்மமானது விஞ்ஞான (சயின்ஸ்) வெளிச்சத்தின் உதவியைக்கொண்டு மதம் என்ற பேரிருளை அகற்றுகிறது. அதன் மூலம் தொழிலாளிகள் இறந்த பின்னர் நிகழப்போகும் வாழ்க்கையில் கவலை கொள்வதை துறந்துவிட்டு இந்நிலவுலகில் தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமை நிறைந்த வாழ்க்கையினின்று மீள்வதற்காக போராடுவார்கள்.

"மதம் என்பது அவரவர்களின் சொந்த விஷயம்"—இதுவே மதத்தைப்பற்றி சமதர்மவாதிகளின் (சோஷியலிஸ்ட்ஸ்) அபிப்புராயமாகும், ஆனால் இறந்துபட்ட வார்த்தைகளைப் பற்றி தப்பர்த்தம் செய்து கொள்ளாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டியது அவசியமாகும். அரசாங்கம் சம்மந்தப்பட்டவரையில் மதத்தை அவர்களுடைய சொந்த விஷயமாகப் பாவிக்க வேண்டும் என்று சொல்லுகின்றோமேயல்லாமல், நம் சமதர்மக் கட்சியார் சம்மந்தப்பட்ட வரையில் நம் அங்கத்தினர்களுக்கு மதத்தை அவர்களுடைய சொந்த விஷயமாக விட்டுவிட முடியாது.

★

நிற்க தொழிலாழிலாளர்களின் சமதர்ம (சோஷியலிஸ்ட்) கட்சியைப் பொறுத்த வரையில் மதத்தை எவருடைய சொந்த விஷயமாகவும் பாவிக்க முடியாது. நம்முடைய கட்சியானது தொழிலாளர் கட்சியே யாகும். அன்றியும், விடுதலைக்குப் போராடும் சுய அறிவு (சுயமரியாதை உணர்ச்சி) பெற்றமுற்போக்காளர்களுடைய சங்கமுமாகும். இப்படிப்பட்ட சங்கத்தார் மத நம்பிக்கை என்னும் அறியாமைக்கும் அந்தகாரத்திற்கும் இடம் கொடுக்க முடியாது. அரசாங்கத்தையும் மதஸ்தாபனங்களையும் வேறுவேறாகப் பிரிக்க நாம் கோருவதின்காரணம் மக்களின் அறிவைப் பத்திரிகைகளாலும். பிரசங்கங்களாலும் பெருக்குவதின் மூலம் மதம் என்னும் இருளை அகற்றி விடலாம் என்னும் எண்ணமே யாகும். நமது ருஷிய சமதர்ம (சோஷியலிஸ்ட்) கட்சியின் நோக்கங்களின் முக்கியமானது மதத்தின் பெயரால் தொழிலாளர்கள் ஏமாற்றப்படுவதைத் தடுக்கப் போராடுவதாகும். ஆகையால் நம்மைப் பொறுத்தவரையில் மதத்தை எதிர்த்து நிற்கும் அறிவுப்போர் என்னுடையவும் சொந்த விஷயம் என்று பாவிக்காமல் நம்முடைய கட்சியையும். தொழிலாளர்கள் விடுதலையையும் பொறுத்ததாகவே பாவிக்கவேண்டும்.

★

நம்முடைய வேலைத்திட்டமானது விஞ்ஞானக் கொள்கையில் (சைன்சில்) பற்றுக் கொண்டது. அதாவது திடமான பிரகிருதிப் பொருள்களில் மாத்திரம் நம்பிக்கை கொண்டது. ஆகையினால் நம்முடைய வேலைத் திட்டத்தை விளக்கிக் கூறும் முறையில் சரித்திர பூர்வமாகவும், பொருளாதார மூலமாகவும் மதத்திற்கு ஏற்பட்டிருக்கும் வேலைகளை, அஸ்திவாரங்களை விளக்கிக் காட்ட வேண்டிய அவசியமாகின்றது. இதிலிருந்து நம்முடைய வேலைத் திட்டத்தில் நாஸ்திகப் பிரசாரமும் அடங்கியிருக்கிறது என்பது வெளியாகும். மேலும் இதுவரையில் பிரபுத்துவத்தையும், எதேச்சாதிகாரத்தையும் மேற்கொண்ட அரசாங்கத்தால் தடைப்பட்டது போலல்லாமல், இனி விஞ்ஞான (சைன்சின்) ஆராய்ச்சிகளைப்பற்றிய பிரசுரங்கள் வெளியிடுவது நமது கட்சியின் வேலை திட்டத்தில் ஒரு அம்சமாக இருக்க வேண்டும். ஒரு காலத்தில் ஜர்மனியில் சமதர்மக் கட்சியாருக்கு ஏஞ்சல்ஸ் என்னும் அறிஞர் சொல்லிக் கொடுத்தது போல் பதினெட்டாவதுநூற்றாண்டில் ஏற்பட்ட நிரீச்சுவர (நாஸ்திக) நூற்களை மறுபடியும் பிரசுரிக்க நேரும்.

★

## ஆவடியிலே பெரியார் ராமசாமி!

இருட்டிலே தொங்கும் வௌவால்களுக்கிடையே புத்தொளி பரப்பும் வைரவன்!

நாட்டு நிலையுணரா குருட்டு மதியினரிடையே கொள்கைக் கோமகன்! ஆட்டுமந்தைக் கிடையே அடலேறு!

ஆமாம்; ஆவடிக் காங்கிரசிலே பெரியார் ராமசாமி!

தோள்மீதும், மடிமீதும் வைத்து, தொட்டிலில் இட்டு, தாலாட்டுப்பாடி முன்பு தான் வளர்த்த காங்கிரஸ் ஆவடியிலே இன்று அனாதைப் பிணமாக சாகும் நிலையிலிருக்கும் போது, பழைய பாசம் காரணமாக பெரியார் அதைப் பார்த்து குசலம் விசாரிக்க அங்கே செல்ல வில்லை!

"திராவிட நாடு வெறும் காட்டுக் கூச்சல்"—என்று தீர்மானம் போட்டவர்களிடையே கலைவாணர் என். எஸ். கே. அவர்கள் தனது சிறு நகைச்சுவை நாடகத்தில், திராவிடர் தந்தை பெரியார் அவர்களின் படத்தைத் திறந்துவைத்து, இந்நாட்டிலே பொங்கி எழும் அரசியல் நிகழ்ச்சிகளுக்கு அழகான உருவகம் தந்து, அதை வடக்கத்திய சேட்டுகளிடையே நடத்திக் காண்பித்ததைத்தான் குறிப்பிடுகிறோம்.

ஆவடி நாடகத்திலே பெரியார் படத்தைக் காண்பித்ததும் குழுமியிருந்தோர் அனைவரும் பத்து லட்சம் ரூபாய் செலவில் பிரமாண்டமாக அமைந்திருந்த சத்தியமூர்த்தி நகரே ஆட்டங் கொடுக்கும் வகையில் கையொலி செய்தனராம்—

அதுமட்டுமா? நம்முடைய இந்தி அழிப்புப் போராட்டத்தைப் பற்றியும்கூட கலைவாணர் நாடகத்திலே பலத்த ஆரவாரத்திற் கிடையே—எடுத்துச் சொன்னாராம்.

இந்த நிலையிலேதான் 'அவர்கள்' பேசிக் கொள்கிறார்கள், 'ஆவடியிலே கூடிய நான்கு லட்சம்பேரும் புடம் போட்ட காங்கிரஸ் காரர்கள்' என்று!

## குற்றவாளி வாதியாகிறார்!

மலர் மாலையை மணமக்களுக்குப் போட்டு அழகு பார்ப்போர் பலருண்டு. அதே நேரத்தில் அத்தகைய மலர்களை பிணத்துக்குப் போட்டு ஆசையை தீர்த்துக் கொள்வோரும் உலகத்தில் இல்லாமலாபோனார்கள்! 'இதோ நானிருக்கிறேன், நானிருக்கிறேன்' என்கிறார் ஆச்சாரியார்.

எதேச்சாதிகாரம் கூடாது தான்-நல்லவர்கள் வெறுக்கக்கூடியதுதான் சர்வாதிகாரம். அதற்காக 'உழைத்து வாழுங்கள்' என்று சொல்வது எதேச்சாதிகார நாட்டிலேதான் நிலைக்கு முடியுமென்று சொல்லலாமா? தான் உழைக்கக்கூடாது: தனது வர்க்கம் உழைக்கக் கூடாது என்பதற்காக எல்லோரும் உழையுங்கள் என்பதை எதேச்சாதிகார ஆணவம் என்று சொல்லலாமா? ஆச்சாரியார் இந்தக்கருத்தை மறைமுகமாகத் தெரிவித்திருக்கிறார். காங்கிரஸ் கண்காட்சி மலருக்கு அனுப்பியுள்ள செய்தி யொன்றில் வல்லரசுப் பயமில்லாத நம் இந்தியாவில் எல்லோரையும் உழைக்கும்படி சொல்ல முடியாது என்று பயமுறுத்தியிருக்கிறார்.

குற்றவாளி முன்னே போய் வாதியாகிவிட்டால் வழக்கில் வெற்றிபெற்று விடலாமென்று இந்த மாஜி அரசியல்வக்கீல்எண்ணுகிறார் போலும்!

# கடைசிப்பக்கம்

வேணுகோபால், ஆற்காடு.

(?) கட்டுப்பாடு, ஒழுக்கம், தேசத் தொண்டு — இவைகளை அடிப் படையாகக் கொண்டு ஒரு கட்சி வளரமுடியுமா ?

ஏன் முடியாது? முடியுமென்ப தற்கு தி. மு. கழகமே ஒரு உதாரணமாயிற்றே!

(?) பொங்கலுக்கும், சங்கராந் திக்கும் என்ன வித்தியாசம் ?

'வணக்கம்'—என்பதற்கும், 'நமஸ்காரம்' என்பதற்கும் உள்ள வித்தியாசம் தான்!

பொங்கல் திராவிடர் பண்பாட் டுக்கு விளக்கம் தந்து, புதுப் பானையையும், அதிலே பொங்கும் புதிய அரிசியையும் குறிக்கிறது! 'சங்கராந்தியோ, புழுத்துப்போன சாணி உருண்டை பிள்ளையாராக மாறும் ஆரிய தத்துவார்த்தத்துக்கு தூபம் போடுகிறது!

மூர்த்தி; காரப்பிடாகை

(?) இராமன் காடேகியபோது அயோத்தியாபுரி விதவையைப் போலவா காட்சி தந்தது?

ஏன் காட்சி தந்திருக்க முடி யாது? இராமன் காடேகிய பின் னர் தசரதனும் செத்திருக்கிறான். அவனது சாவுக்குப் பிறகு அவனு டைய அறுபதினாயிரம் மனைவிய ரும் தாலியறுத்திருக்க வேண்டும். அறுபதினாயிரம் கைம் பெண்களு டன் அயோத்யாபுரி விதவையைப் போல காட்சி தராமல் சுமங்கிலி போலவா காட்சி தரும்?

சின்னக்கண்ணு, ரா. மு. பட்டி

(?) பார்ப்பனன் ஒருவன் குறுக் கிட்டதால் நான் போன காரி யம் ஜெயமாகவில்லை; இது பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?

உமக்குமட்டுமல்ல இந்த அனு பவம். பகை மிதித்து. தோளு யர்த்தி வாழ்ந்த திராவிட இனத் தின் பாதையிலே அந்த மத்திய ஆசியாக்கூட்டம் குறுக்கிட்ட தால் தான் இந்த சமுதாயமே உருப்படவில்லையே!

அப்துல் லத்தீப், தஞ்சை.

(?) நான் கதை-வசனம் எழுதப் போகிறேன். சாதாரண டிம் மிப் பேப்பரில் எழுதுவதா? அல்லது நோட்டில் எழுதுவதா?

நல்லவேளை; 'பிரஷ்'ஷால் எழுது வதா அல்லது 'பவுண்டன் பேனா' வால் எழுதுவதா என்று கேட்கா மல் போனீரே! பொதுவாக காகி தத்தில் எழுதினால் போதும்!

சுபாசிமணி, சேலம்.

(?) கட்டுப்பாடு இருந்தால் கலை வளராது - என்பதைப் பற்றி தங்கள் கருத்தென்ன ?

கலைக்கு கட்டுப்பாடு என்னும் வேலி போடுவதை, கவின் ஒழு கும் காட்சிகளைப் பார்க்காதபடி கண்களுக்கு மூடியிடுவதுபோன்ற பைத்தியக்காரச் செயலென்று தான் கருதுகிறேன்! ஆனாலும், அந்த உரிமையைப் பயன்படுத்திக் கொண்டு, கலையிலே ஈடுபாடு உடையோர் பகுத்தறிவுக்குப் பொருந்தாத கற்பனைக் குட்டை யிலே நீச்சல் போடும் எருமை களாகிவிடக்கூடாது; அந்தச் சேற் றிலிருந்து செங் கமலத்தைப் பயிர் செய்யக்கூடிய தோட்டக்காரர்க ளாகத்தான் இருக்கவேண்டும்! அத்தகையோர்தான் நாட்டின் இன்றைய தேவை !

வள்ளுவதாசன், பெரியகுளம்.

(?) நேரு, தான் எழுதிய கட் டுரை ஒன்றில், இந்த நாகரீக காலத்தில்கூட சீசரிசம் (சர் வாதிகாரம்) பரவப்போகிறது என்று எழுதியிருக்கிறாரே; அவரே சீசராக மாறினால் இந் தியாவின் நிலைமை என்ன வாகும்?

நிச்சயம் இந்தியா ரோமாபுரி யாக மாறும்; அதாவது, இங்கும் ஒரு புரூட்டஸ் தோன்றாமலிருக்க மாட்டான், என்கிறேன்.

ராணி, திண்டுக்கல்.

(?) எங்களூர் வாசகசாலைக்கு வரும் தி. மு. க. பத்திரிகை களையெல்லாம் ஒருவர் யாருக் கும் தெரியாது கிழித்தெறிந்து விடுகிறாரே?

பின் என்ன? குரங்குக்கு குறள் படிக்கவா தெரியும்? — அதைப் பிய்த்தெறியத்தான் தெரியும்!

பண்டரிநாதன், பழனி.

(?) கொஞ்ச நாட்களாக தோழர் ராமமூர்த்தியைப் பற்றி ஒன் றும் தெரியவில்லையே; ஏன்?

அவசரப் படாதீர்! தேர்தலின் போது நிச்சயம் தலைகாட்டுவார்

கோவலன், கொழும்பு.

(?) காமராசர் ஆவடியிலே இரண்டு வார்த்தைகள் ஆங்கி லத்தில் பேசினாராமே; என்ன ஆச்சர்யம்?

ஆமாம்; ஆவடியில் நடந்ததெல் லாம் ஆச்சர்யமாகத்தான் இருக் கிறது, காமராசர் முதன் முறை யாக வாயைத் திறந்திருக்கிறார். மோதிலால் மைந்தரோ வசைச் சொற்களை சிதறவிடாமல் முதன் முறையாக சென்னை விஜயத்தின் போது வாயை மூடிக்கொண் டிருக்கிறார்!

சண்முகம், கோவை.

(?) 'கோழிக் கனவு' என்கிறார் களே; அப்படி என்றால் என்ன!

'பாரத ரத்னா' பட்டம் பெற்ற வுடன், இனி நாளை என்ன நடக்கப் போகிறது என்ற நோக்கத்துடன் ராமாயணத்தைத் தலைக்குவைத் துக்கொண்டு மாம்பலத்திலே ஒரு 'முனிவர்' சயனித்திருக்கிறாரே அந்த நிலையை, உதாரணமாகக் கூறலாம்!

'ஈரோட்டுக் கத்தி'; சூ. பட்டி.

(?) ஏற்றிவைக்கப்பட்ட இலட் சியத் திருவிளக்குகளில் ஒன்று அணைந்துவிட்டால்...

உலகம் இருண்டுவிடாது; கவ லைப்படாதீர்! ஒரு நட்சத்திரம் விழுந்துவிடுவதால் வானம் வனப் பிழந்து போவதில்லையே!

சாமி, சிந்தாதிரிப்பேட்டை.

(?) தி. மு. கழகத்தார் இராமா யண நாடகம் ஏன் நடத்துவ தில்லை?

நாங்கள் நடத்திய இராமாயணத் தில் அண்ணா இராவணனாக நடித்து, கம்பரைக் கூண்டிலேற்றி கடாவியதால்தானே நீதிதேவ னுக்கு மயக்கமே ஏற்பட்டது!

பொன்னம்பலம், உறையூர்

(?) திடீரென்று நேரு எம். எஸ். வீட்டிற்குப் போன காரண மென்ன ?

இனிய இசை கேட்டு அரவங் களும் ஓடிவரும் — என்ற பழ மொழி கேட்டதில்லையோ, நீர்?

வள்ளுவதாசன், பெரியகுளம்

(?) நேருவின் மார்பில் ரோஜா இருப்பதின் மர்மம் என்ன?

முள்ளில் ரோஜா இருப்பதில் மர்மம் ஒன்றுமில்லையே!

## அந்தஸ்து

★

இந்தியாவில் தெருவெல்லாம் பஞ்சம்! பட்டினி! என்று ஜப்பானிய அதிகாரி ஒருவர் சென்ற ஆண்டு கிண்டல் செய்தார்!

★

பொன் மீனையும், சிவப்புத் தலைக் கொக்கையும் அனுப்பி சூ-என்-லாய் இந்தியாவின் முதலாளித்துவப் போக்கைக் கண்டித்தார்!

★

இமயத்தின் அடிவாரத்தில் ஆலிலைக் கண்ணனின் படத் தைப் பார்த்து டிட்டோ கை கொட்டிச் சிரித்தார்!

★

ஆனால் பண்டிதர் சொல்லுகிறார் அகிலமெங்கும் இந்தியா வின் அந்தஸ்து உயருகிறது என்று! இதை நம்புகிறீர் களா ?

## பொதுக் குழுக் கூட்டம்

★

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக் குழுக் கூட்டம் பிப்ரவரி 19, 20-ந் தேதி (சனி, ஞாயிறு) களில், கோவை மாவட்டம் பேரூரில் நடை பெறும்.

ஆராயப்படும் பொருள், கூட்டம் நடை பெறும் இடம், பின்னர் அறிவிக்கப்படும்.

## பிப்ரவரி 12, 13 தேதிகளில்
## பெங்களூரில்
## தி. மு. க. மாநாடுகள் நடைபெறும்

Edited, Printed and published by M. Karunanithi at Murasoli Press, 4/128, Mount Road, Madras-6.